OFFICE OF THE REGISTRAR ... 3 - JUN 1914 ... MADRAS

# சென்னை வியாபாரி

என்கிற

# தென்னிந்தியா வர்த்தக ஜர்னல்

புஸ்தகம் 1. Vol. 1. | பிரமாதீச ௵ பங்குனி ௴ —1914 ௵ மார்ச்சு ௴ | ஸஞ்சிகை 11. No. 11.

## LIQUIDATION PROCEEDINGS.

## கம்பெனிகளை முடிவுபடுத்தும் நடவடிக்கைகள்.

---

"பயோனியர் பாங்கு" கேசில் பம்பாய் ஐக்கோர்ட்டில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மக்லீட் தீர்ப்பு சொன்னபோது சிவில் புரொசிஜர் கோடின் ஒரு முக்கியமான அம்சத்தைத் தீர்மானித்திருக்கிறார். அதாவது என்னவென்றால் பாங்கியின் பங்குதார்களில் ஒருவன் பாங்கி அல்லது கம்பெனியை முடிவுக்குக் கொண்டு வரும்படி கட்டாயப்படுத்த கோர்ட்டில் மனு கொடுத்திருக்கிறானே என்கிற காரணத்தை முன்னிட்டு இந்த மனுவை ஏற்றுக்கொள்ள கோர்ட்டார் கட்டுப்பட்டவர்களல்லவென்று தீர்மானித்தார். ஆனால் இந்தியன் ஸ்பீஸி பாங்கு கேசில் பம்பாய் ஐக்கோர்ட்டில் மற்றொரு ஜட்ஜியாகவிருக்கும் சர்டீன்ஷாதேவர் பங்குதாரான் செய்துகொண்டிருக்கும் மனுவை ஏற்றுக்கொள்ளுவது தம்முடைய இஷ்டத்தை பொருந்ததல்லவென்றும் கோர்ட்டார் ஏற்றுக்கொண்டே தீரவேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார். இந்தியன் ஸ்பீஸி பாங்கின் மனு ஆஜர்படுத்தின மிஸ்டர் சேத்னா பயோனியர் பாங் மனுதார் போலவே பத்துப் பங்குகள் தான் எடுத்துக்கொண்டிருக்கிறார். கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவரும்பொருட்டு செய்து கொள்ளப்படும் ஒவ்வொரு மனுவையும் கோர்ட்டார் ஏற்றுக்கொள்ள கட்டுப்பட்டவர்களாகவிருந்தால் மிஸ்டர் ஜஸ்டிஸ் மெக்லிட் சொன்னது போல விஷமகுணாதிசயமுடைய மனிதர்கள் இலேசில் கம்பெனியைக் கெடுத்துப்போடுவார்கள்! எப்படி என்றால் அதிர்ப்த்தி அடைந்திருக்கும் ஒரு பங்குதாரன் மனுக்கொடுத்து கம்பெனிக்கு ஈடுபடுததக்கூடாத பிரமாதமான நஷ்டத்தை விளைவிக்கக் கூடும்.! அந்த மனுவை கோர்ட்டார் ஏற்றுக்கொண்டால் அம்மனு விசாரணை செய்யப்படுவதற்கு இரண்டு வாரங்களுக்கு முந்தி சமாசாரப் பத்திரிகையில் 636-வது ரூலின்படி பயிரங்கப்படுத்த வேண்டும். /இப்படிச் செய்வதால் உண்டாகக்கூடிய பயன் என்னவென்றால் மனு விசாரணை முடியும் பரியந்தம் கம்பெனி தன்னுடைய வேலைகளை நிறுத்தும்படி நேரிடும். ஏனெனில் மனுவின் விசாரணையில் கம்பெனி முடிவுக்குக் கொண்டு வரும்படி கோர்ட்டார் உத்திரவு செய்துவிட்டால் மேலே சொன்ன இரண்டுவார காலத்தில் பட்வாடா செய்யும்படி உத்திரவு செய்த தொகையை தங்கள் கையைவிட்டு வாப்பீஸ் செய்யும்படி நேரிடுமே என்று அஞ்சி டைரக்ட்

டர்கள் பணபட்வாடா செய்ய உத்திரவே செய்யமாட்டார்கள்!

ஸ்பிஷி பாங்கு கேசில் பிரதிவாதியாகிய பாங்கு தரப்பிற்கு ஆஜரான லாயர் மிஸ்டர் செட்டால்வட், அந்த பாங்கியை முடிவுக்குக் கொண்டுவந்து விடவேண்டுமென்று செய்து கொள்ளப்பட்ட மனுவை ஆக்ஷேபித்துப் பேசினபோது பஜாரிலிருக்கும் ஜனங்களுக்கு, லிக்குவிடேஷன் செய்யப்படுவதற்காக செய்து கொள்ளப்படும் மனுவை கோர்ட்டார் ஏற்றுக் கொள்ள உத்திரவு செய்வதற்கும், லிக்குவிடேஷன் செய்ய உத்திரவு செய்வதற்கும் வித்தியாசம் தெரியமாட்டாது. ஆதலால் பாங்கியின் கீர்த்தி ஜனங்கள் மனதில் குன்றிப் போகுமென்று எடுத்துப் பேசினார். கோர்ட்டார் மனுவை ஏற்றுக் கொள்ளுவதென்றால் சாதாரணமாக வியாஜ்ஜிய முதலியவைகளை தாக்கல் செய்து கொள்ளப்படுவதைப்போல தாக்கல் செய்து கொள்ளுவதே தவிர மற்றப்படி வேறில்லை. அப்படியிருந்தும் சாமானிய பஜார் ஜனங்கள் வித்தியாசத்தை அறிந்து கொள்ளாமல் கோர்ட்டில் மனுதாக்கலாகி கோர்ட்டார் பயிரங்கப்படுத்தும் விளம்பரத்தை பார்த்த நிமிஷமே பாங்கியைப்பற்றி பல ஈனமான பிரஸ்தாபங்கள் செய்து வருகிறார்கள் என்று சுட்டிக் காண்பித்தார். இது உண்மை என்பதில் சந்தேகமில்லை. சாமானிய ஜனங்கள் அப்படி பயப்படுவதுடன், பாங்கியிலும் உள்ளபடி யாதொரு வேலையையும் நடத்த முடியாதென்று மூர்த்தி காண்பித்திருக்கிறோம்.

அது ஒருபுறமிருக்க, சொற்ப பங்குடையவர்கள் தானே மனுசெய்து கொண்டிருக்கிறார்கள் என்று அந்த மனுவையும் கோர்ட்டார் அலக்ஷியப்படுத்த முடியாது.

உதாரணமாக ஸ்பிஷி பாங்கு கேசில் மனு செய்துகொண்ட மிஸ்டர் சேதன்னு மேற்படி பாங்கில் 10-பங்குகள்தான் எடுத்துக்கொண்டிருக்கிறார். 50-பங்குகள் எடுத்துக்கொண்டவரும் அதேபாங்கில் ரூபா 4-லக்ஷம்வரையில் டிபாசிட்டில்போட்டிருந்த ஒருபிரபுவும், 27-ஆயிரம் பங்குகள் எடுத்துக்கொண்டிருந்த பல பங்குதார்களும் அந்த மனுவை ஆக்ஷேபித்தார்கள். அப்படியிருந்தும் விசாரணையில் மிக உபாயப் பங்குகள் எடுத்துக்கொண்ட மிஸ்டர் சேதானுவின் மனுவில் சொல்லப்பட்டிருந்தது தான் சரி என்று மற்ற பங்குக்காரர்கள் சொன்ன ஆக்ஷேபனைகள் எல்லாம் பிசகென்றும் புலப்பட்டது. ஆகவே உற்று நோக்கின் இந்த விஷயத்தில் கோர்ட்டாருக்கு அதிக அதிகாரமிருக்கிறது. கோர்ட்டார் அந்தந்த மனுவில் சொல்லப்பட்ட விஷயங்களை விசாரணை செய்து அந்தந்த கேசிற்குத் தகுந்தபடி லிக்குவிடேஷன் செய்யும்படி உத்திரவு செய்தாலும் செய்யலாம் அல்லது மனுவைத் தள்ளுபடி செய்தாலும் செய்யலாம் என்று ஏற்படுகிறது. 1882-ம் வருடத்திய 6-வது ஆக்ட்டாகிய கம்பெனி ஆக்ட் எந்தெந்த சந்தர்ப்பங்களை அல்லது முகாந்திரங்களைக் கொண்டு கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவந்து விடும்படி கோர்ட்டார் உத்திரவு செய்யலாமென்று விபரமாய் கூறுகின்றது. மனுவில் சொல்லப்பட்டிருக்கும் விஷயங்களைக் கொண்டு கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவர கட்டாயப் படுத்தும்படியான காரணங்களிருக்கின்றனவா என்று கோர்ட்டார் ஆலோசனை செய்து தீர்மானிக்க வேண்டியதாயிருக்கிறது. அடியிற்கண்ட காரணங்களை முன்னிட்டு ஒரு கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவந்து விடும்படி கோர்ட்டார் உத்திரவு செய்யலாமென்று ஆக்ட் கூறுகின்றது:—

(a) கம்பெனி ஒருவருடத்திற்குள் முடிவுக்குக் கொண்டுவந்து விடப்பட வேண்டுமென்று கம்பெனி பிரத்தியேகமாக ஒரு தீர்மானஞ் செய்திருந்தால்,

(b) கம்பெனி ஆரம்பமான தேதி முதல் ஒரு வருடத்திற்குள்ளாக வேலை துவக்காமலிருந்தாலாவது அல்லது நடுவில் ஒரு வருடம் முழுதிலும் வேலை செய்யாமலிருந்தாலாவது,

(c) மெம்பர்களுடைய எண்ணிக்கை 7-க்கு குறைந்துபோயிருந்தாலும்,

(d) கம்பெனி அதனுடைய கடனைத் தீர்க்க சக்தியற்றதாயிருந்தாலும்,

(e) இதேமாதிரியான சுபாவமுடைய எந்த காரணத்திற்காவது கம்பெனியை முடிவுக்கு கொண்டுவந்து விடுவது நியாயமென்று கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டால்,

ஆகவே இந்த நிபந்தனைகளைக் கொண்டு, கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவந்து விட வேண்டுமென்கிற நோக்கத்துடன் செய்து கொள்ளப்படும் மனுவை விசாரணை செய்து தீர்மானிப்பது பெரும்பாலும் கோர்ட்டாருடைய இஷ்டத்திற்கு விடப்பட்டிருக்கிறதென்று நன்கு விளங்குகின்றது.

---

# TRADE NOTES.

## வியாபாரக் குறிப்புகள்,

---

### Madras Retirements.

### சென்னை அவுஸ் ரரர்கள்.

சென்னை மெஸர்ஸ் பாரி அண்டு கோ., என்கிற அவுஸின் தலைவராகயிருக்கும் மிஸ்டர் ஏ. எஸ். ஜாக்ஸன், தம்முடைய வியாபார அல்லல் தொல்லல்களை எல்லாம் விட்டு நீங்கி சுகஜீவியாக விருக்க சீமைக்குப் போகப் போகின்றனர். இவர் சென்னைச் சேம்பர் ஆப் காமர்சில் முக்கியமான மெம்பராகயிருக்கின்றனர். சென்னை போர்ட்டு டிரஸ்டிற்கு சேர்மனாக விருந்துவரும் சர் பிரான்சிஸ் ஸ்பிரிங்கும் முந்தி சொல்லப்பட்ட துறையைப்போலவே சீமைக்குப் போகப்போகிறதாக ஒரு வதந்தி உலாவுகின்றது. எப்படியிருந்தபோதிலும் இப்போது 6 மாதகால ரஜா எடுத்துக்கொண்டு சீமைக்குப்போகிறது நிச்சயம் என்று நாம் சொல்லக்கூடும். இவர் இதற்கு முந்தி மாமத்து இலாகாவில் உத்தியோகம் பார்த்து பென்ஷன் பெற்றுக்கொண்டிருப்பவர். ரெயில் இலாகா அனுபோகமும் அவருக்கு விசேஷமாக உண்டு. சென்னை ராஜதானி வியாபாரப்பெருக்கு விஷயமாகவும் அதற்கு இன்றியமையாத ரெயில்வசதி ஏற்பாடு விஷயமாகவும் அனேக ஆலோசனைகள் சொல்லிவந்திருக்கின்றனர். இவருடைய காலத்தில் துறைமுகத்தில் உள்ளபடி பயனைக்கொடுக்கக்கூடிய அனேக வேலைகளும் சீர்திருத்தங்களும் செய்யப்பட்டு வந்திருக்கின்றன.

மெசர்ஸ் பின்னி அண்டு கோ தலைவராயத மிஸ்டர் சர்ஜான் பாய்சன் அடுத்த ஜூன் மாசத்தில் சீமைக்குப்போய் சுகஜீவியாயிருப்ப வருவதாகத் தீர்மானித்திருக்கிறார்கள் என்று நாம் கேள்விப்படுகிறோம். இப்போது மதிராஸ தென்மராட்டா ரயில் கம்பெனிக்கு ஏஜண்டாக விருந்துவரும் மிஸ்டர் ஆண்டர்சன் ரயில்வே போர்ட் மூன்றாவது மெம்பர் ஸ்தானத்திற்கு மாற்றப்படப் போகிறதாகவும் அறிகிறோம்.

---

## Silk Mills.

### பட்டு ஆலைகள்.

பட்டு துணிகள் செய்ய காக்ஷிமீரத்தில் ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனங்கள் நீங்கலாக இந்தியாவில் இரண்டே ஆலைகளிருக்கின்றன. ஒன்று பம்பாயிலிருக்கிறது இதில் தயார் செய்யப்படும் பட்டுத் துணிகள் எல்லாம் பர்மாவுக்கு அனுப்பப்படுகிறது, மற்றொன்று கல்கத்தாவிலிருக்கின்றது. இது வருஷம் ஒன்றுக்கு 16 லக்ஷம் பெறுமான முள்ள சரக்குகள் தயார் செய்து இங்கிலாண்டு பிரான்சு அமெரிக்கா ஆகிய தேசங்களுக்கு ஏற்றுமதி செய்கிறது. பம்பாயிலிருக்கும் ஆலையின் பெயர் சாசூன் அண்டு அலையன்ஸ் சில்க்மில் (Sasoon and Alliance Silk Mills.) பம்பாய் கவர்னராகிய லார்ட் வில்டன் அவர்களும் அவர்களுடைய பெருமாட்டியும் சென்ற வாரம் இந்த ஆலைகளை வந்து பார்வையிட்டார்கள்.

---

## FINANCE COMMISSION

### நாணயக் கமிஷன்.

இந்தியன் நாணயக்கமிஷன் ரிப்போர்ட் பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. அந்த ரிப்போர்ட்டின் சாராம்சத்தை ரூட்டர் கம்பெனியார் இத்தேசத்திற்கு தந்தி மூலியமாக அனுப்பியிருக்கிறார்கள். கமிஷன் ஆழ்ந்த கவனத்துடன் அதன்முன் கொண்டுவரப்பட்ட பிரஸ்னைகளை ஆராய்ந்து முடிவு செய்திருக்கிறதென்று தெரிகிறது. அநேக முக்கியமான பிரஸ்னைகளைப் பற்றி நிச்சயமான முடிவு செய்திருக்கிறது. இந்தியாவில் அடியோடு மாறுதல்கள் செய்யக்கூடாதென்றும் திடீரென்றும் எந்த மாறுதலும் செய்யக் கூடாதென்று கமிஷன் அபிப்பிராயப் படுகிறது. நடைமுதல் தேவைக்காக இந்தியாவிற்கு அதிகப்படியான பொன் தேவையில்லையென்றும் ஜனங்களும் விரும்பவில்லையென்றும் கமிஷன் தீர்மானத்திருக்கிறது. Gold Standard Reserve (பொன் கையிருப்பு) லண்டனில் வைக்கப்பட்டிருப்பதே நியாயமான ஏற்பாடென்று அபிப்பிராயப்படுகிறது. இந்தியாவில் ஸ்தாபிக்க பிரரேபணை செய்யப்பட்டிருக்கும் சர்க்கார் பாங்கி விஷயமாக கமிஷன் திடீரென்று யாதொன்றும் சொல்ல முடியாதென்றும் இந்தியாவிலேயே இந்தப் பிரஸ்னையைப் பற்றி ஆலோசனை செய்ய ஒரு கமிட்டி நியமிக்கப்பட வேண்டுமென்றும், அந்த கமிட்டியார் ஆலோசனைசெய்து சர்க்கார் பாங்கிஒன்று ஏற்படுத்துவது உசிதமல்லவென்று தீர்மானித்ததால் அந்த யோசனையை விட்டுவிட்வேண்டுமென்றும் ஏற்படுத்துவதுஉசிதம் என்று தீர்மானித்தால் உடனே ஏற்பாடுசெய்துவிட வேண்டுமென்றும் ஜனங்கள் தங்களுடைய பணங்களை புதைத்து வைக்கும் பழைய வழக்கத்தைவிட்டு பாங்கியில் சேர்த்து வைக்கும்படியான முயற்சிகளை ஆதரிக்க வேண்டுமென்றும் அபிப்பிராயப் படுகிறது.

---

## The Imperial Legislative Council.

### வைசிராய் சட்டசபை.

நிகழ்மாத ஆரம்பத்தில் நடந்த சட்டசபை மீட்டிங்கில் வர்த்தக சம்பந்தமான அநேக விஷயங்கள் ஆலோசனை செய்யப்பட்டன. ஆனரபில் சர் பாஸலபாய் கரிம்பாய் அவர்கள் ஜப்பான் தேசத்திலும் ஜாவா தேசத்திலும் எப்படி சர்க்கரை செய்யப்பட்டு வருகிறதென்பதை கவனித்து வரும் பொருட்டு இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு டெபுடேஷன் அனுப்ப உத்தேசித்திருக்கிறார்களா என்று கேட்டார். இதற்கு ஆனரபில் மிஸ்டர் W. கிளார்க் அடியிற்கண்டபடி பதில் சொன்னார்:—ஜப்பான், ஜாவா தேசங்களிலிருந்து 1912-13-ம் வருடத்துடன்

முடிவாகும் கடந்த 5-வருடங்களில் இந்தியாவில் இறக்குமதி செய்யப்பட்ட இறக்குமதிக் கணக்கு பயிரங்கப்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு தேசங்களிலிருந்தும் விசேஷமான இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது. ஜப்பானிலிருந்து பெரும்பாலும் பட்டுநூலும், ஜவுளியும், நெருப்புப் பெட்டியும், பருத்திடைகளும் இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. ஜாவாவிலிருந்து பெரும்பாலும் சர்க்கரையும், வெல்லமும் மிகவும் விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன. இந்த இரண்டு சரக்குகள் கடந்த 5-வருட காலத்தில் எவ்வளவு இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றனவென்று கணக்கெடுத்தால் கடந்த 5வருஷத்தில் ரூபா 600 லக்ஷத்திலிருந்து ரூபா 940 லக்ஷத்திற்கு ஏறியிருக்கிறது. இந்தியாவினுடைய வியாபார நிலைமையை அறிந்துகொள்ளும்படியாக ஜப்பான் கவர்ன்மெண்டாரும் ஜாவா கவர்ன்மெண்டாரும் இந்தியாவிற்கு டெபுடேஷன் அனுப்ப உத்தேசித்திருக்கும் சமாசாரம் இந்தியா கவர்ன்மெண்டார் கேள்விப்படவில்லை. ஆனால் 1912-ல் ஜப்பானில் செய்யப்படும் ஜவுளியும் நெருப்புப் பெட்டியும், பீங்கான் முதலிய சாமான்கள் இந்தியாவில் விலையாகுமா என்பதை ஆராய ஜப்பானிலிருந்து ஒரு உத்தியோகஸ்தர் வந்திருந்தார். இதன்பிறகு இன்னும் இரண்டு ஆபீசர்களும் வந்திருந்தார்கள். ஜப்பானிலிருந்து இவ்வளவு விசேஷ இறக்குமதி செய்யப்பட்டிருப்பதற்கு காரணத்தைக் கண்டுபிடிக்க யாதொரு பிரத்தியேகமான ஏற்பாடும் செய்யப்படவில்லை. ஆனால் சிலவருடகாலமாக மற்றதேசச் சரக்குகள் இந்தியாவில் விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டு வருவதுபோல ஜப்பான் தேசச் சரக்கும் விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. ஜாவாவிலிருந்து சர்க்கரை விசேஷமாக இறக்குமதி செய்யப்பட்டு வருகிறதற்குக் காரணம் என்னவென்றால் உள்நாட்டில் தயார் செய்யப்பட்டு வரும் சர்க்கரை போதாமல் ஜாவாவிலிருந்து சர்க்கரை இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. இந்தியாவிலே தேசத்திற்குப் போதுமான சர்க்கரை உற்பத்தி செய்யப்படும்படியாகவும் உயர்ந்த மாதிரியான சர்க்கரை உற்பத்தி செய்யப்படும்படியாகவும் இந்தியா கவர்ன்மெண்டார் முயற்சி செய்து வருகிறார்கள். ஜப்பானில் இந்திய சாமான்கள் செலவாகுமா என்பதைக் கண்டுபிடிக்க ஒரு டெபுடேஷன் ஜப்பானுக்கு அனுப்புவது தற்காலம் இந்தியா கவர்ன்மெண்டாருடைய யோஜனையில்லை. ஆனால் ஜாவா தேசம் சம்பந்தப்பட்டவரையில் பம்பாய் விவசாய இலாகாவைச்சேர்ந்த ஒரு ஆபீசர் சர்க்கரை செய்யும் தொழிலை கற்றுக்கொண்டு வரும் பொருட்டு ஜாவாவிற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்.

ஆனரபில் மிஸ்டர் கிளார்க் இந்தியன் கம்பெனி மசோதா ஆக்ட்டின்பேரில் பிரத்தியேக கமிட்டியார் செய்திருக்கும் ரிப்போர்ட்டை ஆஜர்படுத்தினார்.

ஆனரபில் சர் பாசல்பாய் கரிம்பாய் கலப்படபஞ்சைப்பற்றியும் ஈரப் பஞ்சைப்பற்றியும் கேட்ட கேள்விக்கு ஆனரபில் மிஸ்டர் கிளார்க் அடியிற்கண்ட பதில் சொல்லியிருக்கிறார்.—

கலப்படப் பஞ்சைப்பற்றியும் ஈரப்பஞ்சைப் பற்றியும், இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் லோக்கல் கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா காரியதரிசிக்கும் கடிதப் போக்குவரத்துக்கள் நடந்தன. ஆனால் 9-வது வருடத்திய இண்டர்நேஷனல் காட்டன் காங்கிரசில் செய்யப்பட்ட தீர்மானத்தை அனுசரித்து இன்னும் யாதொரு சிபார்சும் இந்தியா காரியதரிசிக்குச் செய்யப்படவில்லை. அது விஷயமாக இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா காரியதரிசிக்கும் லோக்கல் கவர்ன்மெண்டாருக்கும் போக்குவரத்தான கடிதங்களை இந்த சமயம் பயிரங்கப்

படுத்துவதாக கவர்ன்மெண்டாருக்கு உத்தேச முமில்லை.

## Export of Pearls.

### முத்து ஏற்றுமதி.

பெர்ஷியன் குடாக்கடலில்பெஹிரீன் (Beherin) துறைமுகத்திற்கு சமீபத்தில் ஏதேஷ்டமாக முத்துச்சிப்பி கொழிக்கப்படுகிறது. பெஹிரீன் துறைமுக ஏற்றுமதிக் கணக்கைப் பார்த்தால் மற்ற சரக்குகள் ரூபாய் 33 லக்ஷத்திற்குக் குறைவாக ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கும்போது முத்துமட்டிலும் ரூபாய் 305 லக்ஷத்திற்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்று தெரிகிறது. மற்ற தேசத்திற்கு முத்து ஏற்றுமதி செய்யப்படுவதுடன் 1912-13-ல் இந்தியாவிலிருந்து 308 லக்ஷ ரூபாய்க்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. பெரும்பாலும் இந்த முத்துகள் எல்லாம் பம்பாயில் செலவாய்ப்போகின்றன. 1912-ல் முத்து வியாபாரம் பலமாய் நடந்துவந்திருக்கிறதென்று பம்பாய் பாங்கு முறிவு சம்பவத்தால் வெளிவந்திருக்கிறது. பால்கன் சண்டையால் தற்காலம் முத்தின் விலை குறைந்துபோயிருக்கிறது. முத்தின் விலை ஏறுமென்று ஏதேஷ்டமாக வாங்கி கையிருப்பு வைத்துக்கொண்டிருக்கும் வியாபாரிகள் கஷ்டமடைந்துவருகிறார்கள்.

## India and Burma Rice Crop.

### இந்தியா பர்மா நெல்பயிர்.

1913-14-ம் வருஷத்திற் கவர்ன்மெண்டார் இந்தியா பர்மா அரிசி ரிப்போர்ட் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அடியிற்கண்ட விபரம் அதில் காணப்பட்டிருக்கிறது:—மொத்த உற்பத்தி சென்ற வருஷத்திற்கு இந்த வருஷம் 100-க்கு 2 பேணிக்கு கம்மியாயிருக்கிறது. வங்காள உற்பத்தி 100-க்கு 11 கம்மியாயிருக்கிறது. சென்னை உற்பத்தி 100-க்கு 5 கம்மி. பர்மா உற்பத்தி 100-க்கு 5 இந்த மாகாணங்களில் உற்பத்தி கம்மிப்பட்டிருந்தபோதிலும் பிகார் ஒரிசா மாகாணத்தில் 100-க்கு 36 வீதம் அதிக உற்பத்தியாயிருப்பதால் ஏறக்குறைய ஈடுபடுத்தப்பட்டு போய்விட்டது.

## Sugar Cane Crop.

### கரும்புப்பயிர் ரிப்போர்ட்.

1913-14-க்கு கரும்புப்பயிர் 1912-13 யை விட 100-க்கு 12 வீதம் கம்மியாக உற்பத்தியாகியிருக்கிறது. இவ்வளவு குறைவுக்குக் காரணம் என்னவென்றால் ஐக்கிய மாகாணங்களிலும் சென்னை ராஜதானியிலும் உற்பத்தி கம்மிப்பட்டுப்போய்விட்டது. ஆனால் பம்பாய், சிந்து, பஞ்சாப், அசாம் ஆகிய இந்த மாகாணங்களில உற்பத்தி முந்திய வருடத்தைவிட அதிகரித்திருக்கிறது. பிகார் ஒரிசா மாகாணத்தில் உற்பத்தி 100-க்கு 1 வீதம் கம்மி என்று கவர்ன்மெண்டாருடைய ரிப்போர்ட் அறிவிக்கிறது.

## Chartered Bank of India, Australia and China.

### சார்ட்டர்ட் பாங்க்.

1913-ம் வருடம் டிசம்பர் மாதம் 31-ந்தேதியுடன் முடிந்த அரைவருஷத்திற்கு சார்ட்டர்ட் பாங்கியின் நிலைமையை அடியிற்காண்க:-சிப்பந்திகளுடைய சம்பளத்தின்பேரில் 100-க்கு 10 வீதம் சிப்பந்திகளுக்கு இனாம் கொடுக்கப்பட்ட பிறகு வருடத்திற்கு 100-க்கு 14 வீதம் டிவிடெண்டு என்கிற லாபமும், வருமான வரி நீங்கலாக பங்கு ஒன்றுக்கு 12 ஷிலிங் இனாம் கொடுக்கவேண்டுமென்றும் இங்கிலாண்டில் கூடிய டைரெக்டர் மீட்டிங்கில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

10 ஆயிரம் பவுன் ரிசர்வ் நிதியுடன் சேர்க்கப்பட்டது. ஆகவே ரிசர்வ் நிதியின் மொத்தத் தொகை 1,800,000 பௌன். ஆபீசர்களுடைய சூப்பர் அனுயுவேஷன் நிதியில் பத்தாயிரம் பவுன் சேர்க்கப்பட்டது. 25 ஆயிரம் பவுன் கட்டடக்கணக்கில் எழுதப்பட்டது. ஆகவே மறு ஆறுமாத ஆரம்பக் கணக்கின் தலைப்பில் 120,253 பவுன் காண்பிக்கப்பட்டது.

---

## The Late Lord Minto.

## காலஞ்சென்ற லார்டு மிண்டோ.

லார்ட் ஹார்டிஞ்சுக்கு முந்தி இந்தியாவில் வைசிராயாகவிருந்த லார்டு மின்டோ அவர்கள் இங்கிலாண்டில் ஒரு வாரம் வரையில் நோயாய் இருந்து இம்மாதம் இறந்துபோய்விட்டதைக் கேள்விப்பட்டு விசனிக்கின்றோம். இவர் வைசிராயாக நியமிக்கப்படுவதற்கு முந்தி ராணுவத்தில் பாரி உத்தியோகங்களை வகித்துவந்தார். இவருடைய நிர்வாக காலத்தில் தான் வைசிராய் நிர்வாக சபையிலும் லோக்கல் கவர்ன்மெண்டு நிர்வாக சபைகளிலும் சுதேச மெம்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். இவருடைய காலத்திலதான் சட்ட சபைகளும் விஸ்தரிக்கப்பட்டன!

---

## Pioneer Bank.

## பயோனீர் பாங்க்.

பம்பாயிலிருக்கும் பயோனியர் பாங்கை முடிவுக்குக் கொண்டுவந்து விடும்படி அதில் பங்கு எடுத்துக் கொண்டிருப்பவர் பம்பாய் ஐக்கோர்ட்டில் மனுசெய்துகொண்டார். இந்த மனு ஜட்ஜி ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் மேக்லீடினால் விசாரணை செய்யப்பட்டு தள்ளுபடி செய்யப்பட்டது. மேற்படி பாங்கு எப்போதும்போல நடத்தப்படும்படியாக உத்திரவு செய்யப்பட்டிருக்கிறது. சமீபத்தில் நடந்த பாங்கு முறிவு சம்பவங்களுக்குள் காரணங்களுக்குள் பங்குக்காரர்களுடைய மிதமிஞ்சின பயமும் காபுராவும் ஒன்றென்று எண்ணப்படுகிறது!

---

## Milk Supply of Bombay.

## பம்பாயில் விற்பனைசெய்யப்படும் பால்.

பம்பாயில் விற்பனை செய்யப்படும் பால் சோதனை செய்யப்பட்டதில் 4-பங்கு ஜலமாகவும் 1-பங்கு பாலாகவுமிருக்கிறதென்றும் ரிப்போர்ட் செய்யப்பட்டிருக்கிறது. 618-தினுசு பால்களைப் பரிசோதனை செய்ததில் ஒரு தினுசிலாவது காச வியாதியை உண்டுபண்ணக் கூடிய பூச்சுகளில்லை என்று கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் பாலைச் சாப்பிடுவதால் பம்பாயில் காச வியாதி உண்டாகிறதென்று பயப்படவேண்டியதில்லை. இந்தியப் பாலுக்கும் அமெரிக்கா ஐரோப்பா பாலுக்கும் சோமானங்களில் கனத்த வித்தியாசமிருக்கிறது. அன்னிய தேசங்களின் பாலைவிட இந்த தேசத்து எருமைப்பால் திடிப்பாயிருப்பதுமன்றி கொழுப்புள்ளதாயும் பலத்தைக் கொடுக்கக்கூடிய ஸத்தையும் அடக்கிக்கொண்டிருக்கிறது. இந்தியாவில் பால் எவ்வளவு திடிப்பாயிருக்கவேண்டுமென்பதற்கு ஒரு அளவு ஏற்படவேண்டியது அவசியம். அந்த அளவு ஐரோப்பா அமெரிக்கா தேசங்களின் அளவுகளிருந்து வித்தியாசப்பட்டதாயிருக்கவேண்டும் என்று மேற்படி ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது.

---

## Bombay Banking Company.

### பம்பாய் பாங்கிங் கம்பெனி.

கிரிகாம் என்னும் ஊரிலிருக்கும் பம்பாய் பாங்கிக் கம்பெனி இப்போது முடிவுக்குக் கொண்டுவரப் படுகிறது. இந்த கம்பெனியின் மானேஜராக விருக்கும் மிஸ்டர் கிருஷ்ணகோத்தலால், பல்லன்ட்ராமச்சந்திர சோமன் என்கிற கண்டிராக்டர் தம்மிடம் ஒப்புவித்த ரூபா 4 ஆயிரத்தையும் மோசம் செய்துவிட்டதாக நம்பிக்கை மோசக்குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார். பம்பாய் போலீஸ் கோர்ட்டார் இந்தக் கேசை விசாரணைசெய்து தீர்ப்பு சொல்லுவதற்காக ஒருதினம் குறிப்பிட்டிருந்தார்கள். அந்தத் தேதியில் மிஸ்டர் கோத்தலால் கோர்ட்டில் ஆஜரானார். போலீஸ் கோர்ட்டார் அன்று தீர்ப்பு சொல்லாமல் மற்றோர் தினம் குறிப்பிட்டு அறிவிப்பதாகச் சொல்லவே மிஸ்டர் கொத்தலால் கோர்ட்டைவிட்டு வெளிவரவே போலீஸ் துப்பு விசாரணை இலாக்காவைச் சேர்ந்த மிஸ்டர் ரெங்கனாதராவ் அவரை கைதிசெய்து போலீஸ் டிப்டி கமிஷனர் முன்னில் ஆஜர்படுத்த ரிமாண்டு ஜெயிலில் வைக்கப்பட்டிருக்கிறார். ஏதோ உண்டிகள் சம்பந்தமாக அவர்பேரில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

---

## The Late Mr. Papiah Chetty and Ragaviah Chetty.

### காலஞ்சென்ற மிஸ்டர் பாப்பைய செட்டி ருகவய்ய செட்டி.

மிஸ்டர் பாப்பசெட்டி, ராகவய்ய செட்டியார் நிகழ் மாசம் 4-ந் தேதி புதன்கிழமை சென்னை கோவிந்தப்ப நாயக்கன் வீதியிலிருக்கும் அவருடைய வீட்டிலிறந்து போய்விட்டதைக் கேள்விப்பட்டு விசனமடைகின்றோம். இவர் பெரிய வியாபாரி. பிதிராஜ்ஜிதத்தால் திரண்ட சொத்தை அடைந்தவரல்ல. வியாபாரத்திலேயே இவருக்குள்ள திரண்ட ஆஸ்தியைசம்பாதித்துக் கொண்டவர். மிகவும் காருண்யம் தெய்வ பக்தியு முடையவர். ரூபா 4-லக்ஷத்திற்கு மேல் தருமத்திற்காக பிரத்தியேகமாக ஏற்பாடு செய்திருக்கிறார். சென்னை இந்தியன் பாங்கிற்கு டைரக்டரா யிருந்தனர்.

---

## The Cauvery Arbitration Board.

### காவேரி மத்தியஸ்த கோர்ட்டார்.

மைசூர் சமஸ்தானத்தில் காவேரியில் கன்னியம்பாடி தேக்கம் போடுவதால் மைசூர் கவர்ன்மெண்டாருக்கும் சென்னை கவர்ன்மெண்டாருக்கும் தகரார்கள் உண்டாயிருக்கின்றன. இந்த தகராரை மத்தியஸ்தஞ் செய்து தீர்க்க ஒரு போர்டார் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்தப் போர்டார் இதுவரையில் மைசூரில் கோர்ட்டு நடத்தி விசாரணை செய்துவந்தார்கள். நிகழ் மாதம் 15-ந் தேதி முதல் சென்னையில் விசாரணை நடத்திவருகிறது.

---

## Peshwar Bank and Hindustan Bank.

### பீஷ்வார் பாங்கும் ஹிந்துஸ்தான் பாங்கும்.

முல்டானிலிருக்கும் பீஷவார் பாங்கும், ஹிந்துஸ்தான் பாங்கும் ஆகிய இந்த இரண்டு பாங்குகளின் லிக்குவிடெட்டர் (Liquidator) டைரெக்டர்கள் பாங்குப் பணத்தை தகாத காரியங்களில் வினியோகப்படுத்தியிருக்கிறார்கள் என்று முல்டான் ஜில்லா ஜட்ஜிக்கு மனு செய்துகொண்டிருக்கிறார்கள். கோர்ட்டார் டைரெக்டர்களுக்கு நோட்டீஸ் அனுப்பியிருக்கிறார்கள்.

---

## Cotton Crop.

### பருத்திப் பயிர்.

சென்ற வருஷத்தைவிட பிரஸ்தாப வருடத்தில் பருத்தி பஞ்சு 100-க்கு 9 வீதம் அதிகப்படியாய் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வளவு அதிகப்படிக்குக் காரணம் என்னவென்றால் நார்தர்னர்ஸ், வெஸ்டர்னர்ஸ், காக்நோடு சரக்குகளின் பயிர் மிக சுபிக்ஷமாயிருக்கிறதென்பதே.

---

## The Bombay Gazette.

### பம்பாய் கெஜட்.

பம்பாய்கெஜட் என்கிற பத்திரிகை பம்பாயில் நீண்டகாலமாகவிருந்த பத்திரிகை. சமீபத்தில் ஏற்பட்ட "பம்பாய் கிரானிக்கல்" என்கிற பத்திரிகை வெளிவரவே முந்தி சொல்லப்பட்ட பத்திரிகையின் பிரதாபம்குறைந்துபோய்விட்டது. ஆதலால்பிரதி சொல்லப்பட்ட பத்திரிகையுடன் போட்டிபோட முடியவில்லை என்று பம்பாய் கெஜெட்டின் டைரக்ட்டர்கள் "இகழ் மாதம் 9உ கூடியமீடிங்கு தீர்மானித்து பம்பாய் கெஜெட்டின் கம்பெனியை முடிவுக்கு கொண்டு வந்துவிடும்படி தீர்மானித்திருகிறார்கள்.

---

## China's Trade.

### சீனுதேச வியாபாரம்.

சீனர்கள் இன்ஜினீரில் வேலை கற்றுக்கொள்ளும்படியாகவும் சீனுவில் உற்பத்தியாகும் விலை பொருள்களை அறிந்துகொள்ளும்படியாகவும் ஒரு சுலபமாக கலாசாலை ஏற்படுத்த ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையால் சீனுவில் ஜெர்மானியர்களுடைய வியாபாரம் பலப்பட்டுப்போகுமென்றும் இங்கிலாண்டு போட்டியில் பின்வாங்காமலிருக்கவேண்டு மென்கிற நோக்கங்கொண்டு லார்ட் ஒல்லேயம் ருசிப் "லண்டன் டைம்ஸ்" பத்திரிகைக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார்என்று ரூட்டர் தந்தி அறிவிக்கிறது.

---

## Calcutta Exhibition.

### கல்கத்தா பொருட் காக்ஷி.

கல்கத்தாவில் ஒரு இண்டர் நேஷனல் பொருட்காக்ஷி காண்பிக்கப்பட போகிறது. மிஸ்டர் ஹார்ட் என்பவரும் ஏற்பாடு செய்து கொண்டு வருகிறார்கள். மிஸ்டர் நபிட் என்பவர் ஐரோப்பாவில் பொருட்காக்ஷி ஏற்பாடுசெய்து நடத்திப்பெயர் பெற்றவர். இக்காக்ஷியின் நோக்கம் என்னவென்றால் (1) உலகவியாபாரசாமான்களை கிழக்கு தேசமார்க்கட்டுகள் வியாபாரஞ் செய்யவேண்டுமென்பதே (2) இந்திய மார்க்கட்டுகளுக்கும் இந்திய மார்க்கட்டு சாமான்கள் எந்தெந்தமார்க்கட்டுகளில் விரும்பப்படுகிறதோ அந்தமார்க்கட்டுகளுக்கும் வியாபார ஐக்கிய உணர்ச்சி உண்டாக்கவேண்டு மென்பதே.

(3) கிழ் தேசங்களுடைய பிரமாண்டமான ஏற்றுமதியையும் இறக்குமதியையும் உலகத்தாருடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்பதே. (4) கிழக்கு தேசம் வியாபாரப் பெருமைக்கு கல்கத்தா பிரதானஸ்தலமாக விருக்கவேண்டு மென்பதே.

இந்த பொருட்காக்ஷியை நடத்துவதாயிருந்தால் 25 ஆயிரம் பவுன் பிடிக்குமென்றும் அதில் லக்ஷம்பவுன் மேலேகூறப்பட்ட இரண்டு காக்ஷிக்கர்த்தர்களுக்காகவும், இந்தியாவில் போட்டு முடிக்கவேண்டிய செலவிற்காக எடுத்து வைக்கப்பட வேண்டுமென்றும், இந்த பொருட்காக்ஷி ஏற்பாட்டிற்கு சீமையிலிருக்கும் 40-வர்த்தக ஆலோசனை சபைகள் சம்மதம் கொடுத்திருப்பதாகவும் தெரிகிறது, கல்கத்தாவில் 1883-84-வில் நடந்த பொருட்காக்ஷி 20

ஏக்கரா பூமியில் நடத்தப்பட்டது உத்தியோ த்திலிருக்கும் பொருட்காக்ஷிக்கு 100 ஏக்கரா பூமிதேவயாகவிருக்கும். பிரஸ்தாபபொருட்கா க்ஷியில் அடியிற்கண்ட வகுப்பைச்சேர்ந்த பொ ட்கள், சித்திரைவேலைகள் கைவேலைகள் கைத் தொழிற்கள் இன்ஜினீரில் விவசாயம், உல்லாச விளையாட்டு சாமான்களும் இன்னும் பலவகை சாமான்களும் காண்பிக்கப்படும்:—

## Bycotting Wool and Fruits.

### கம்பளத்தையும் பழத்தையும் விலக்குதல்.

தென் ஆப்பிரிக்காவிலிருந்து தேசப்பிரஷ்டை செய்யப்பட்டிருப்பவர்கள்இப்போது இங்கிலாண்டில் கொண்டுவந்து விடப்பட்டிருக்கிறார்கள். இங்கிலாண்டிலிருக்கும் வேலைக்காரர் கக்ஷிக்காரர்கள் இந்த சம்பவத்தை முன்னிட்டு ஆத்திரங்கொண்டு, யூனியன் கவர்ன்மெண்டார் தேசப்பிரஷ்டை செய்யப்பட்டவர்களை பழையபடி தென் ஆபிரிக்காவுக்குள் கொண்டு போய் விடாதபக்ஷத்தில் தென் ஆபிரிக்காவில் உற்பத்தியாகும் பழங்களையும், செய்யப்படும் கம்பங்களையும் பிரிடிஷார் வாங்காதபடி கட்டுப்பாடு செய்ய உத்தேசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

## Tiger Skin Dress.

### புலித்தோல் உடுப்பு.

பிரான்சு தேசத்தில் வசிக்கும் ஒரு அமெரிக்கா தேச துரைசாணி பாரிஸ் நகரத்தில் நடந்த ஒரு பந்தயத்திற்கு வேடிக்கை பார்க்க வந்தபோது 6 ஆயிரம் டாலர் விலை மதிப்புள்ள புலித்தோல் ஆடை உடுத்திக்கொண்டுவந்தனளாம்.

## Exhibition of Russian Goods.

### ருஷிய பொருட்காட்சி.

சென்ட் பீட்டர்ஸ்பர்க்கிலிருக்கும் ருஷிய ஏற்றுமதி சங்கத்தார் சென்ட் பீட்டர்ஸ்பர்க் என்னும் பிரதான நகரத்தில் ஒரு பொருட்காக்ஷி நடத்தப்போகிறார்கள். அன்னிய தேச வியாபாரிகள் அறிந்து கொள்ளும்படியாக ருஷியா தேசத்தில் உற்பத்தியாகும் விளை பொருள் சாமான்களும் தயார் செய்யப்படும் சாமான்களும் காண்பிக்கப்படுமாம். இந்தப் பொருட்காக்ஷியில் ஒரு கமிஷன் இலாக்காவும் ஏற்படுத்தப்படும். பொருட்காக்ஷியைப் பார்க்க வருபவர்கள் தேவையான பொருளுக்கு உத்திரவு கொடுத்தால் அந்த இலாக்காகாரர்கள் அவைகளை அனுப்பவேண்டிய விதமாக அனுப்பிப் போடுவார்களாம்.

## Milk Supply to Infants.

### சிசுக்களுக்கு ஸப்ளை செய்யப்படும் பால்.

சிசுக்களுக்கும் குழந்தைகளுக்கும் சப்ளை செய்யப்படும் பாலிலிருக்கும்படியான அசுத்தத்தையும் கலப்படத்தையும் நீக்கி அந்த பரிசுத்தமான பால் செய்துவிடவேண்டுமென்று இப்போது லிவர்ப்பூல் நகர முனிசிபாலிட்டியார் மின்சார உபாயத்தைக்கொண்டு பரிசுத்தம் செய்து சப்ளை செய்துவருகிறார்கள். பாலிலிருக்ககூடிய எல்லா அசுத்தங்களும், பூச்சிகளும் நீக்கப்பட்டுப்போகின்றன. பாலும் ருசி குன்றிப்போகாமலும் மாறுமலுமிருக்கிறதாம்.

## A Bill for Exclusion of Asiatics.

### ஆசியா கண்டத்தார்களை விலக்கும் மசோதா ஆக்ட்.

அமெரிக்காவிலிருக்கும் வாஷிங்க்டனில் கூடியிருக்கும் House of Representatives என்கிற பிரதிநிதிசபை, ஆசியா கண்டத்தார் தேசத்திற்குள் வருவதைத் தடுக்க ஒரு சட்டம் பிறப்பிப்பதாக யோசனைசெய்து கொண்டிருக்கிறார்கள். இந்த சபை முன்னில், ஐயோவா சர்வகலாசாலையில் புரொபசராயிருக்கும் டாக்டர் சுபேந்திரபோஸ் சென்று ஆசிய கண்டத்தார்கள் அதிலும் இந்துக்கள் ஆரியர்களென்றும் ஆதலால் அவர்கள் பேரில் துவேஷம் வைக்கக்கூடாதென்றும் பிரிடிஷ் பிரஜைகளுக்குள் ஒரு வகுப்பார் என்றும் அந்த பிரஜைகளுக்குள்ள பாத்தியதைகள் அவர்களுக்கு முண்டு என்றும் சொன்னார்.

சேர்மேன்:—கிரேட்பிரிட்டன் தேசத்தின் குடியேற்ற நாடுகளில் எல்லாம் ஆசியா கண்டத்தார் விலக்கப்படுகிறார்களே!

புரொபசர்:—அந்த செய்கையை இங்கிலாண்டிலிருக்கும் கவர்ன்மெண்டார் ஆதரிக்கவில்லை. அப்படி ஆதரிப்பார்களாகில் இதுவரையில் தேசம் கண்டறியாத பெருத்த உள்நாட்டுக் கலகம் நடக்கும்.

---

## India Office.

### இந்தியா ஆபீஸ்.

இங்கிலாண்டிலிருக்கும் இந்தியா ஆபிசின் பேரில் யாதொருகுற்றமுமில்லை என்பது அவர்கள் நாணயவிஷயமாகசெய்த ஏற்பாடுகளை எல்லாம் சரிதான் என்று இந்தியன் நாணயக்கமிஷன்கூறி இந்தியா ஆபீசை குற்றத்திலிருந்து விலக்கிவிட்டார்கள். நாம் இப்படி கேள்விப்பட்டபிறகு இந்தியா மந்திரியாகிய "லார்ட் கிரு" இந்தியாஆபீசையும் அதன் மந்திராலோசனைசபையையும் சீர்திருத்த ஒருமசோதா ஆக்ட் சாமானியர் சபையின் ஆலோஜனைக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

---

## Manchester Boycott.

### மான்செஸ்டர் வியாபாரிகளின் கட்டுப்பாடு.

மான்செஸ்டர் சேம்பர்ஆப்காமர்சுக்கும்அதாவதுவர்த்தக ஆலோசனை சபையையும் டில்லி சீமைஜவுளி வியாபாரிகள் கலகமும் என்ன உடன்படிக்கைசெய்து கொண்டிருக்கிறதோ அந்த ஷாத்துகளைமீறி டில்லிவர்த்தகர்களுடனும் கான்பூர் வர்த்தகர்களுடனும் வியாபாரஞ் செய்யக்கூடாதென்று மான்செஸ்டரிலிருக்கும் பாரி வியாபார கம்பேனிகள் கட்டுபாடுசெய்து கொண்டிருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவென்றால் டில்லி சீமைஜவுளி வியாபாரச்சங்கத்தார் ஏற்கனவே ஒப்புக்கொண்ட ஷாத்துகளில் சிலவற்றை மாற்றிப்போட முயற்சி செய்துவருகிறார்கள்.

---

## Guzerat Bank Smash.

### குஜரத்து பாங்கி முறிவு.

பாங்கிமுறிவுகள் இன்னும் ஒய்ந்தபாடில்லை. நிகழ்மாதம் 2உ அகமடாபாத்திலிருக்கும் குஜராட் பாங்கி கதவுகளை மூடிக்கொண்டது.

---

## Mr Vydya Sagar Pandya & Presidency Banks.

### மிஸ்டர் வித்தியாசாகர் பாண்டியாவும் பிரசிடென்சி பாங்கிகளும்.

பிரசிடென்சி பாங்கிகளில் இந்தியர்கள் டைரக்டர்களாக நியமிக்கப்பட வேண்டுமென்று சீமையில்கூடி விசாரணை நடத்தின இந்தியர

ளையக்கமிஷன்முன்னில் இந்தியாபாங்கிசெக்ரேட்டிரியாகிய மிஸ்டர் வித்தியா சாகர்பாண்டியா அவர்கள் சாக்ஷியம்பகன்றார். பிரசிடென்சி பாங்கிகளில் போட்டுப் புறட்டப்படும் மூல தனம் எல்லாம் ஐரோப்பியருடையதென்றும் மிஸ்டர் வித்தியா சாகர் பாண்டியா இப்படிச் சொன்னது விதை விதைக்காமலிருக்கும் போது அறுப்பதற்கு எத்தனித்ததற்குச் சமானமாகிறதென்றும் சென்னையில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதற்குப்பதிலாய் பாங்கி 1843ம் வருடத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. இப்போது முக்கால் நூறூண்டானபோதிலும் இந்தியாவில் ஒரு இந்தியர்கூட டைரட்டராக யிருந்ததில்லை என்று கல்கத்தாவில் பிரசுரமாகும் காப்பிட்டல் என்னும் பத்திரிகை கூறுகின்றது.

## India Ceylon Route.
## இந்தியா சிலோன் வழி.

இந்தியாவிற்கும் சிலோனுக்கும் நூதனவழி ஏற்பட்டுப் போய்விட்டபடியால் தூத்துக்குடியின் பெருமை குன்றிப் போய்விடுமென்று எண்ணக்கூடாதென்றும் இந்த நூதனவழி ஏற்பட்டது உலகத்தார் அறிந்து கொண்டால் சிலோனுடைய வியாபாரம் பெருகுமென்றும், அப்படிப் பெருகும்போது தூத்துக்குடி தன்னுடைய பாகத்தையும் பெறுமென்றும் சென்னை கவர்னராகிய கனந்தங்கியலார்ட்பெண்ட்லாண்டு அவர்கள் ஷை புதிய பாதையைத் திறக்கும் போது சொன்னார்கள். அதுபோல் தூத்துக்குடிபெருமை குன்றிப்போவதற்கு நியாயமில்லை. சுமார் 10 வருடங்களுக்கு முந்தி $3\frac{1}{2}$ கோடி ரூபாய் தூத்துக்குடியில் நடந்துவந்திருக்கையில் இப்போது 10 கோடி ரூபாய் வியாபாரம் நடந்து வருகிறது. கடந்தநாள் சிலவருடகாலமாக தூத்துக்குடி துறைமுக விஷயமாக கவர்ன்மெண்டார் லக்ஷரூபாய் செலவு செய்திருக்கிறார்கள். இன்னும் இருப்பு ரூ 64 ஆயிரம் செலவு செய்யப் போகிறார்கள். இவையன்றி துறைமுகத்தை விருத்திசெய்ய லக்ஷத்து 70 ஆயிர ரூபாய் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள்.

## Turkish Consul General.
## துருக்கி கான்சல் ஜெனரல்.

இந்தியாவில் துருக்கி கான்சல் ஜெனரலாயிருந்த மேன்மை தங்கிய ஹாலில் காலிட்பே தேக அசௌக்கியத்தை முன்னிட்டு துருக்கி ராஜாங்கத்திற்குப் பிரதிநிதியாகயிருக்கும் தம்முடைய உத்தியோகத்தை ராஜீநாமாகொடுத்து விட்டார்கள். இவர்களுக்குப் பதிலாக இன்னார் நியமிக்கப்படுவார் என்று இன்னும் வெளிப்படவில்லை. சமீபகாலத்தில் கான்ஸ்டான்ட்டி நோபிலுக்குப் போகப்போகிறார். வட இந்தியாவில் அவர் சுறறுப்பிரயாணஞ்செய்த போது அவருக்கு வேண்டிய வசதிகள் செய்து கொடுத்ததற்காக இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களிடம் நன்றி பாராட்டி வந்தனமளிக்கின்றார். முஸ்லிம் அவரிடம் அளவு காட்டி வந்ததற்காக அவர்களிடமும் நன்றி பாராட்டி அவர்களுக்கும் வந்தன மளிக்கிறார்கள். இந்தப் பிரகாரம் ஒரு பத்திரிகையின் நிருபரிடம் சொன்னார்.

## Paris Bankers
## பாரிஸ் பாங்கிக்காரர்கள்.

பாரிசிலிருக்கும் பெயர் போன பாங்கிகாரர்களாகிய மெசர்ஸ் மெல்லியில்களின் அண்டுகோ என்பவர்களின் பிரதிநிதியாகிய மிஸ்டர் H. W. கிளாஸ் கோட் ஆவனல் கல்கத்தாவிற்கு வந்திருக்கிறார். அவ்விடத்தில் ஒரு கிளைபாங்கி ஏற்படுத்த வேண்டுமென்பது அவருடைய கருத்து.

## South Africa Commission Enquiry
## தென் ஆப்பிரிக்கா கமிஷன் விசாரணை.

தென் ஆப்பிரிக்கா இந்தியர்களுடைய குறைகளைப்பற்றி விசாரணை செய்ய நியமிக்கப்பட்ட கமிஷன் இந்தியா கவர்ன்மெண்டாரால் அனுப்பப்பட்ட சர்பெஞ்ஜமன் ராபர்ட்சனுடைய உதவியுடன் விசாரணையை நடத்தி முடிவு செய்துவிட்டார்கள். இன்னும் மூன்று தினங்களுக்குள் கமிஷன் ரிப்போர்ட் பகிரங்கப்படுத்தப்படும். மூன்று பவுன் வரியை ரத்து செய்துவிடும்படியாகவும் இந்தியர்களுடைய விவகாரங்கள் அவர்களுடைய மதக் கொள்கைகளுக்கு விரோதமின்றி நடக்கும்படி கமிஷன் செய்திருக்கிறது. தீபாந்திரச் சட்டங்களில் எந்தெந்த அம்சங்கள் கொடுமையாயிருக்கின்றனவோ அவைகளை யெல்லாம் நீக்கிப்போட்டு புதிய சட்டம் பிறப்பிக்கும்படி கமிஷன் சிபார்சு செய்திருக்கிறது என்று கேப்டவுனிலிருக்கும் டைம்ஸ் நிருபர் ஷை பத்திரிகைக்கு தந்தி அனுப்பியிருக்கிறார். கமிஷன்களுடைய சிபார்சை ஏற்றுக்கொண்டு இருதரப்பாரும் சமாதானமாகப் போவது கௌரவமாயிருப்பதுடன் தென் ஆப்பிரிக்காவும் இன்னும் சொல்லப்போனால் பிரிடிஷ் ராஜ்யமே க்ஷேமமாகவிருக்குமென்பது லண்டன் டைம்ஸ் அபிப்பிராயப்படுகின்றது.

---

## A Disastrous Fire
## ஒரு பெரிய தீவிபத்து.

பம்பாய் கொலாபா ரேவு துறையிலிருந்த பாரி பஞ்சுக்கிடங்கில் தீ பிடித்துக்கொண்டு பஞ்சுபேல்கள் உள்பட எரிந்துபோய்விட்டது. 1 கோடியே 70 லக்ஷ ரூபாய் நஷ்டமென்று மதிப்பிடப்படுகிறது. இந்த சம்பவத்தால் 4 மாதகாலமாய் இறங்கிக்கொண்டு வந்த பஞ்சு விலை மறுபடியும் ஏறிவிடுமென்று எண்ணப்படுகிறது. பிரஸ்தாபத் தீ சம்பவம் சென்ற 23௳ நடந்ததென்று பம்பாயிலிருந்து தந்தி சமாசாரம் எட்டியிருக்கிறது.

---

## Karachi Port Trust.
## கராச்சி துறைமுக டிரஸ்ட்.

கராச்சி துறைமுகத்தில் செய்யப்படப்போகிற விருத்திகளில் ரூ. 34 லக்ஷமுதல் 90 லக்ஷம்வரையில் செலவுசெய்ய உத்தேசம் செய்யப்பட்டிருக்கிறது. இதற்காக போர்ட்டிரஸ்ட் அதிகாரிகள் டிபன்சர் விடப்போகிறார்கள். பணமுடையவர்கள் இந்த டிபன்சர் பத்திரங்களில்பணம் போட்டு முடிக்கலாம்.

---

## Third Member of the Railway Board.
## ரயில்வே போர்டின் மூன்றாவது மெம்பர்.

தற்காலம் மதிராஸ் தென்மாராட்டா ரயில்வே கம்பெனிக்கு ஏஜண்டாக விருந்து வரும் மிஸ்டர் ஆண்டர்சன் ரயில்வே போர்டின் மூன்றாவது மெம்பராக நியமிக்கப்படுவார் என்று 'பயோனீர்' பத்திரிகை கூறுகின்றது.

---

## Honorable Members for the Legislative Council.
## சட்டசபைக்கு ஆனரபில் மெம்பர்கள்.

சட்டசபைகளில் பெரும்பாலும் சட்டபரீக்ஷைகளில் தேறியவர்கள் மெம்பர்களாக நியமிக்கப்பட்டு வருகிறார்கள். வெகுகாலமாக இவ்வகையாரே மெம்பர்களாக நியமிக்கப்படும் புராதீன வழக்கத்தைவிட்டு இனி வியாபார சம்பந்தமுடையவர்கள் அதிகப்படியாய் நியமிக்கப்பட்டு வரவேண்டுமென்று பம்பாயில் பிரசுரமாகும் காமர்ஸ் அண்டு கோ-ஆபரேஷன் என்கிற வாராந்திரப் பத்திரிகை கூறுகின்றது.

---

## Pioneer Bank.
## பயோனீர் பாங்க்.

பம்பாயிலிருக்கும் பயோனீர் பாங்கை முடிவுக்குக் கொண்டுவந்துவிடும்படி பம்பாய் ஹைக்

கோர்ட்டில் மனு செய்துகொள்ளப் பட்டது இந்த மனுவை விசாரணை செய்த மிஸ்டர் ஜஸ்டிஸ் மக்லியாட் மனுவைத் தள்ளுபடி செய்து பாங்கு எப்போதும்போல் நடைபெறும்படியாக உத்திரவுசெய்தார்கள். இப்படி உத்திரவு செய்ததுடன் முழு விஷமத்தின் காரணம் என்னவென்றால் பயிரங்கமான கம்பெனிகளை முடிவுக்குக் கொண்டுவந்துவிடும்படி ஒவ்வொருபங்குதாரரும் மனு செய்துகொள்ளுவதுதான்! இம்மாதிரி மனுக்களை கோர்ட்டில் ஆஜர்ப்படுத்தும் சொலிசிட்டர்களுடைய நடத்தையை விசாரணைசெய்து அவர்கள்நேரே மேற்படிமனு செய்துகொள்ளுவதில் பற்றுடையவர்களாக விருந்தால் அன்னோர்கள் லாயர்தொழில் நடத்துவதிலிருந்து நீக்கப்படவேண்டுமென்று ரிமார்க்செய்திருக்கிறார்கள்.

## Credit Bank Cases.

### கிரேடிட் பாங்கு கேசுகள்.

பம்பாயில் முடிவுக்குக்கொண்டுவரப்படும் கிரெடிட்பாங்கு மானேஜிங் டைரக்டர் மிஸ்டர் ஜாபர் ஐசப்பும், மேற்படி பாங்கின் கணக்குப் பரிசோதகராகிய நாசர்வான்ஜி மிஸ்ட்ரியும் பம்பாய் பிரசிடென்சி மாஜிஸ்ட்ரேட் மிஸ்டர் ஆஸ்டனால் விசாரணை செய்யப்பட்டு பொய்யான பாலன்ஸ்ஷீட் தயார்செய்த குற்றமும், நம்பிக்கை மோசக் குற்றமும் சாட்டப்பட்டு பம்பாய் செஷன்ஸ் கோர்ட்டிற்கு கமிட்செய்யப்பட்டிருக்கிறார்கள்.

---

# ENQUIRIES.

## விசாரணை.

### Crushed Bones.

### நொருங்கிய எலும்பு.

இங்கிலாண்டிலிருக்கும் வார்விக்மாகாணத்தில் ஒரு அவுஸ்காரர்கள், இந்தியாவிலிருந்து நொறுங்கிய எலும்பு ஏற்றுமதி செய்யக்கூடியவர்களுடன் வியாபாரஞ் செய்ய விருப்பமுடையவர்களாக யிருக்கிறார்கள்.

---

### எண்ணெய்.

ஜெர்மனி தேசத்தில் ஹாம்பர்க் என்னும் நகரத்தில் எண்ணெயை வியாபாரஞ் செய்யும் கம்பேனியார் தங்களுடைய சரக்கை விற்பனை செய்வற்காக கல்கத்தாவில் ஒரு ஏஜண்டு நியமிக்க விரும்புகிறார்கள்.

---

### போலி நகைகள்.

சாட்டட்டிகை, ஒட்டியாணம், ஜடைபில்லைகள் மோதிரங்கள், கடுக்கன்கள், கடியாரச்சங்கிலிகள் முதலிய சாமான்களில் வியாபாரம் செய்யும் லிவர்ப்பூலிலிருக்கும் ஒரு கம்பேனியார் இந்தியாவில் அந்த சாமான்களை தருவித்து விற்பனைசெய்ய விரும்புகிறவர்களுடன் அறிமுகப் படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள்.

---

### எட்டிக்காய், இஞ்சி, களிப்பாக்கு.

இந்தியாவிலிருந்து எட்டிக்கொட்டை, இஞ்சி, களிப்பாக்கு ஆகிய இந்தமூன்று சாமான்களையும் ஏற்றுமதிசெய்யக் கூடியவர்களுடன் வியாபாரம் செய்ய லண்டனிலுள்ள அவுஸ்காரர்கள் விரும்புகிறார்கள்.

N. B.—விரும்பும் கம்பேனிகளுடைய மேல்விலாசம் வேண்டுமானால் கல்கத்தா, கவுன்சில் அவுஸ் தெரு, நியூ இம்பீரியல் செக்ரேட்டரி, கமர்ஷியல் இன்டெலிஜென்ஸ் டைரக்ட்டர், ஜெனரல் அவர்களுக்கு (Director General of Commercial ntelligence, New Imperial Secretariat 1 Council House Street, Calcutta) எழுதித் தெரிந்து கொள்ளவும்.

# COMMERCIAL CASES IN COURT.

## வியாபார சம்பந்தமான கேஸ்கள்.

### Madars High Court.

### சென்னப்பட்டணம் ஐக்கோர்ட்

சவுத்இந்தியன் இண்டஸ்டிரியல்ஸ் கேஸ்.

இந்தக்கேஸ் இன்று கூப்பிடப்பட்டபோது மிஸ்டர் ஹாஜி இஸ்மேல்ஸேட், தம்முடைய பங்குகளை எல்லாம் மிஸ்டர் ஹாஜி பக்கிர் முகமது சேட்டிற்கு விற்றுப்போட்டார் என்றும் மிஸ்டர் பக்கிர் முகமத் சேட் கம்பேனியை நடத்த தயாரா யிருக்கிறார் என்றும் ஆகலால் கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவரும்படி கோர்ட்டாரால் ஏற்கனவே கொடுக்கப்பட்ட உத்திரவு ரத்துசெய்யப்படவேண்டுமென்றுகோர்ட்டாருக்கு மனுசெய்து கொள்ளப்பட்டது. ஏற்கனவே கோர்ட்டார்செய்த உத்திரவு ரத்து செய்யப்பட வேண்டுமானால் அது சட்டப்பிரகாரம் ரத்து செய்யப்பட வேண்டுமென்று கோர்ட்டார் சொல்லி விசாரணையை நிகழ்மாதம் 10௳ தள்ளிவைத்தார்கள்,

ஜட்ஜிகள்:—சீவ் ஜட்ஜி

ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ்
ஒல்ட் பீல்ட்.

மெசர்ஸ் கிராம்ப்ட்டன் அண்டுகோ வாதிகள்
அப்பீல் வாதிகள்

இந்தியா காரியதரிசியார் பிரதிவாதி அப்பீல்
பிரதிவாதி.

கேசின் விபரம்.—மதுரையில் புதிதாக ஜில்லாக் கலெக்டர் கச்சேரி கட்டுவதற்காக சென்னையிலிருக்கும் மெசர்ஸ் கிராம்ப்ட்டன் கம்பேனியாருக்கு ஜில்லாகலேக்டர் ஒப்பந்தம் விட்டிருந்தார். இந்த ஒப்பந்தசம்பந்தமாக கவர்ன்மெண்டார் ஒப்பந்தம்மீறி நடந்ததால் தங்களுக்கு ரூ 3 லக்ஷம் நஷ்டம் நேரிட்டிருக்கிறதென்றும் அதை வசூல்செய்ய ஜில்லா கலெக்டராயும் இந்தியா காரியதரிசியையும் பிரதிவாதிகளாகச்சேர்த்து சென்னைப்பட்டணம் ஐக்கோர்ட்டில் அசல்தரப்பில் மெசர்ஸ் கிராம்ட்டன் கம்பெனியார் வியாஜ்ஜியம் கொண்டு வந்தார்கள். இந்தவியாஜ்ஜியத்தை ஜட்ஜிமிஸ்டர் வாலிஸ் விசாரணைசெய்து பிரியாதில் கண்ட சில பாபத்து தொகைகளுக்கு மட்டிலும் டிக்ரி கொடுத்து பாக்கி பாபத்து தொகைகள் சம்பந்தப்பட்ட வியாஜ்ஜியத்தைச் செலவு தொகையுடன் அடியோடு தள்ளிப் போட்டார்கள்.

ஆகவே மெசர்ஸ் கிராம்டன் கம்பெனியார் இந்தத் தீர்மானத்திற்கு விரோதமாக அப்பில்செய்து கொண்டார்கள்.

லாயர்கள்:—அப்பில் வாதிதரப்பிற்கு பாரிஸ்டர் மிஸ்டர் நூஜன்ட் கிரான்டும், அப்பில் பிரதிவாதி தரப்பிற்கு அட்வோக்கேட் ஜெனரலும் ஆஜரானார்கள்.

கேசின் நடவடிக்கை:—நிகழ்மாதம் 9, 10௳ களில் அப்பில் விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, கக்ஷிக்காரர்கள் சமாதானம் செய்து கொள்ளுவது சாத்தியமாயிருக்கிறதென்றும் ஆதலால் அப்பில் விசாரணையை தள்ளிவைக்க வேண்டுமென்று அட்வோக்கேட் ஜெனரல் கோர்ட்டாரை வேண்டிக்கொண்டார். கோர்ட்டார் நிகழ்மாதம் 13௳ வரையில் விசாரணையைத்தள்ளிவைத்திருக்கிறார்கள்,

### அசல் தாப்பு.

ஜட்ஜி:—ஆனாபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பேக்வேல்

சவுத் இந்தியன் இண்டஸ்டிரியல் கம்பெனி கேஸ்.

கேசின் விபரம்:—இந்தக் கேசைப்பற்றி பல தடவைகளில் சென்னை வியாபாரியில் எடுத்தெழுதப்பட்டிருக்கிறது. கடைசியாய் இந்த கம்பெனியை சட்டப்படி முடிவுக்குக்கொண்டுவிடும்படி கோர்ட்டார் உததிரவு செய்தார்கள். அப்படி உததரவு செய்யப்பட்டதற்கு பிறகு மெசர்ஸ் ஹாஜிபக்கிர் முகமதுசேட் வகையரு தாங்கள் மெசர்ஸ் இஸ்மயில் சேட் வகையருவினுடைய பங்குகளையெல்லாம் வாங்கிப்போட்டதாகவும் மற்ற கடன்களையெல்லாம் தீர்த்துப் போட்டு தாங்களே கம்பெனி நடத்தப்போகிறதாகவும் கோர்ட்டார் முடிவுக்குக்கொண்டுவந்துவிடும்படி செய்த உத்தரவை ரத்து செய்துவிடவேண்டுமென்று மனுசெய்து கொண்டார்கள். இந்தக் கேசு நிகழ்மீ 9வ விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

லாயர்கள்:—பாரிஸ்டர் மிஸ்டர் ரிச்மென்டு மனுதார் தாப்பிற்கும், மிஸ்டர் ஜட்ஜி கிராண் மிஸ்டர் சாமியர், மிஸ்டர், சிடம்பமத் முதலானவர்கள் கம்பெனிக்குங்கடன்காரர்கள் தாப்பிற்கும் ஆஜரானார்கள்.

உத்தரவு:—கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவந்துவிடும் உத்திரவை அநுசரித்து செய்யப்படும் நடவடிக்கைகள் ஒருவாரம் வரையில் தள்ளிவைக்கப்படவேண்டும். இதற்குள்ளாக கடன்காரர்களுடைய கடனைத் தீர்ப்பதற்கு ஜாமீனாகமனுதார் மதிராஸ் பாங்கியில் ரூ-35 ஆயிரம் கட்டிப் போடவேண்டும். நிற்க, கோர்ட்டார் கம்பெனியை முடிவுக்குக் கொண்டுவரும்படி செய்த உத்திரவிற்குப் பிறகு மெசர்ஸ் பக்கிர் சேட் மெசர்ஸ் ஸமால் சேட்டினுடைய பங்குகளை வாங்கிக்கொண்டிருப்பதை கோர்ட்டர் அங்கீகரித்துக்கொள்ளும் படியும் மெசர்ஸ் பக்கிர் மகமது சேட் ஒரு மனுசெய்து கொண்டார். கோர்டார் அந்த மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

—————:-:—————

## SMALL CAUSE COURT.

### ஸ்மால் காஸ் கோட்.

(முதல் பென்ச் முன்னில.)

மார்க்க சகாயமய்யர்—வாதி.

மதிராஸ் தென் மாராட்டா ரெயில்வே கம்பெனியார். } பிரதிவாதி

கேசின் விபரம்:—வாதி தென் மாராட்டா ரயில்வே கம்பெனியில் செட்டி குண்டா ஸ்டேஷன் மாஸ்டர். சென்ற வருடத்தில் நடந்தாயில்வே கட்டுப்பாட்டில் வாதியும் சேர்ந்திருந்ததாக பிரதிவாதியாகிய ரயில்வே கம்பெனியார்கள் நினைத்து அவரை வுத்திபோகத்தை விட்டு நீக்கிப் போட்டார்கள். வாதிக்கு பிராவிடென்டு நிதியிலும் இனும் நிதியிலும் ரூபா 210-சேர்ந்திருந்தது. இதை பிரதிவாதிகள் கொடுக்காமல் போகவே, வாதி சென்னை ஸ்மால்காஸ் கோர்ட்டில் வியாஜ்ஜியம் கொண்டுவந்தார். இந்த வியாஜ்ஜியத்தை இரண்டாவது ஜட்ஜி விசாரணை செய்து பிரதிவாதிகள் பேரில் வாதிக்கு ரூபா 210க்கு டிக்கிரி கொடுத்தார். ஆகவே பிரதிவாதிகள் அப்பீல் செய்து கொண்டார்.

ஸ்மால்காஸ் அப்பீல்கள் ஸ்மால்காஸ் புல் பென்ச் கோர்ட்டார் விசாரணை செய்யவேண்டுமென்பது சட்டம்.

லாயர்கள்—பிரதிவாதிகள் தரப்பிற்கு மெசர்ஸ் டேவிட்பிளைட்வெல் மோர்ஸ் என்கிற சொலிசிட்டர் கம்பெனியார்களுடைய உதவியுடன் பாரிஸ்டர் மிஸ்டர் சி. ஆர். ஆஸ்பர்ன் ஆஜராகி அப்பீல் கிரவுண்டுகளை எடுத்துச் சொல்லும்போது வாதி தம்முடைய கடமைகளைச் செய்யத் தவறிப்போய் விட்டார் என்றும் கம்பெனியார் அவரை உத்தியோகத்தைவிட்டு நீக்கிப்போட்ட படியால் அவர் பிராவிடெண்டு நிதியைக்கேட்க பாத்தியமற்றவர் என்று சொன்னார்கள்.

உத்திரவு—அப்பீலை ஏற்றுக் கொள்ளும்படியும் வாதிக்கு நோட்டீஸ் அனுப்பும்படியும் கோர்ட்டார் உத்திரவு செய்தார்கள்,

---

## பம்பாய் ஐக்கோர்ட்.

---

ஜட்ஜி—ஆனரபில் மிஸ்டர் ஜஸ்டிஸ் பீமான்.

வாதிகள்—மெசர்ஸ் ஹீர்ஜி கெட்சி அண்டு கோ.

பிரதிவாதிகள்—பி. பி. சி. ஜ. ரயில்வே கம்பெனியார்.

எறிந்துபோன பஞ்சுமூட்டைக் கேஸ்.

கேசின் விபரம்—வாதி கம்பெனியார் உஜ்ஜைன் என்னும் ரயில்வே ஸ்டேஷனிலிருந்து பம்பாயிக்கு 186-பஞ்சு மூட்டைகள் பிரதிவாதிகளுடைய ரயிலில் ஏற்றி அனுப்பினார்கள்; வழியில் அவைகள் எறிந்துபோய் விட்டன. ஆகவே வாதி வியாஜ்ஜியம் கொண்டுவந்தார்.

தீர்ப்பு—தீவிபத்து உண்டானதற்கும் அதனால் உண்டான சேதத்திற்கும் ரயில்வே கம்பெனியார் உத்திரவாதிகள் என்று நாம் தீர்மானிக்கிறோம். மூட்டைகளில் தீபிடித்த பின்பும் மூட்டைகளின் சொந்தக்காரனாகவும் மூட்டைகளை ஏற்றிக்கொண்டுபோன வண்டி பத்திரங்கள் முதலியவையின் சொந்தக்காரனாயிருந்தால் என்ன பந்தோபஸ்தானவும் ஜாக்கிறதையான ஏற்பாடுகள் செய்வாரோ அவ்வளவு ஜாக்கிறதையான ஏற்பாடுகள் செய்ததாக பிரதிவாதி கம்பெனியார் ருஜுப்படுத்தத் தவறிப்போயிருக்கிறார்கள். ஆகையால் தீபிடித்து எறிந்தபிறகு அவர்கள் அஜாக்கிறதையாகவும் மிகவும் அலக்ஷியமாகவு மிருந்தார்கள் என்று நான் தீர்மானிக்கிறேன். ஆகையால் ரூபா 23400-க்குப் செலவு தொகைக்கும் வட்டிக்கும் வாதிக்கு டிக்கிரி கொடுக்கிறேன் என்று தீர்ப்பு சொன்னார்கள்.

---

# MADRAS MARKET REPORT.

## சென்னை மார்க்கட் ரிப்போட்டுகள்.

### Piece Goods.

### சீமை ஜவுளி.

21-3-1914.

மார்ககட் மந்தம். சீமை மார்க்கட். உறுதியாக விருந்தபோதிலும், உள்ளூர் மார்க்கட்டில் கையிருப்பு எதேஷ்டமாக விருப்பதால் மார்க்கட் மந்தமா யிருக்கிறது. இப்போது எந்த ரகத்திற்கும் இன்டெண்டு கொடுக்கப்படுகிறதில்லை. உள்ளூர் அவுஸ்காரர்களிடமும் சரி, வியாபாரிகளிடமும் சரி கையிருப்பு எதேஷ்டமா யிருக்கிறது. கோரா ரகங்களை அவுஸ்காரர்கள் தாழ்ந்த விலைக்குக் கொடுக்கத் தயாராக விருந்தபோதிலும் வாங்குவாரில்லை. பணக் கசாலால் இன்னுமிருப்பதால் வியாபாரமும் மெதுவாயிருக்கிறது. அவஸ்காரர்களும்வியாபாரிகளும் தங்கள் சரக்குகளை கையிருப்பை கரைக்கும் நோக்கத்துடன் கொளு முதலுக்கு கம்மியாய் விற்பனை செய்து வருகிறார்கள். சித்திரை மாதம் பிறந்தால் சுமாரான வியாபாரம் நடக்குமென்று பிரஸ்தாபமாக விருக்கிறது. வெளியூர்களில்கூட கையிருப்பு எதேஷ்டமாக விருக்கிறது. சகஜமாக ரூபா 10-ஆயிரம் முதல் ரூபா 15-ஆயிரம் வரையில் இவ்விடம்வந்து சரக்கு எடுத்துக்கொண்டு போகக்கூடிய பெரிய வியாபாரிகள் எல்லாம் இப்போது ரூபா 500-க்கும் ரூபா 1000-க்கும் சரக்கு எடுத்துக்கொண்டு போகிறார்கள். வேலூர்,வாணியம்பாடி, ஆம்பூர் முதலிய விடங்களில் மழையில்லாததாலும் பிளேகாவு மிருப்பதால் இவ்வருடம் சென்னையில் வியாபாரம் குறைவு.

### Grey Shirtting.

### கோரா ஷர்ட்டிங்.

கிராக்யில்லை. விலை பீசுக்கு அணா 4-விதம் குறைந்துபோ யிருக்கிறது.

### Grey Jaconets.

### கோரா ஜாக்நட்.

கிராக்கியில்லை, ரூபா 3-8-0 ரூபா 4-0-0 க்கு விற்கும்படியான மட்ட ரகங்களுக்கு உபாய கிராக்கி யிருக்கிறது.

### Grey Mulls.

### கோரா மல்லுகள்.

இப்போது விலை ரூபா 4-0-0 ஆக யிருக்கிறது. ஆனால் யாதொரு பேரமும் செய்யப்படுகிறதில்லை, சென்ற வாரம் ரூபா 4-0-0 விதம் அவுஸ்காரர்கள். உள்ளூரில் பேரஞ் செய்திருக்கிறார்கள்.

## White Mulls.

### சலவை மல்லுகள்.

தேவையில்லை. 1703-செ. ரூபா 7-1; 1702-ரூபா 6-9-0.

---

## Grey Dhoties.

### கோரா தோவத்திகள்.

மார்க்கட் மந்தம், உபாயபேரம் நடந்து வருகின்றது; தற்கால விலை.—

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| $4\frac{3}{4}$ கெஜம் | 76-ம் செ. | ரூ. | 1 | 14 | 6. |
| $6\frac{3}{4}$ ,, | ,, | ,, | ரூ. | 1 | 11 | 6. |
| $5\frac{3}{4}$ ,, | ,, | ,, | ரூ. | 1 | 8 | 0. |

---

## White Dhoties.

### சலவை தோவத்திகள்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| $5\frac{3}{4}$ | 5000-செ. | பொக்குமடி | ரூ. | 1 | 0 | 6 |
| $5\frac{1}{4}$ | 400 ,, | ஷை | ரூ. | 0 | 14 | 6 |
| $5\frac{3}{4}$ | 3700 ,, | சலவை சாதாமடி | ரூ. | 1 | 6 | 0 |
| $5\frac{1}{4}$ | 3700 ,, | ஷை | ரூ. | 1 | 3 | 0 |
| 4×7 | 3700 ,, | ஷை | ரூ. | 1 | 7 | 0 |

---

## Sarries.

### சேலைகள்.

வியாபாரம் மெதுவா யிருக்கிறது.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 9 கெஜம் | சாக்லட்டு | ரூ. 2-6-0 முதல் | ரூ. | 2 | 10 | 0 |
| 8 கெஜம் | ,, | ரூ. 2-2-0 முதல் | ரூ. | 2 | 6 | 0 |
| $4\frac{1}{2}$ கெஜம் | ,, | ரூ. 2-0-0 முதல் | ரூ. | 2 | 9 | 0 |

---

## Color.

### வர்ண ரகங்கள்.

வர்ண புக்மல் விலை 20 கெஜம் ரூ. 2-4-0 மு. 2-2-0

---

## Horock's Millor Long Cloth.

### ஹோரக்ஸ் மில்லர் லாங்கிளாத்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 240 கெஜம் | M. O. | ரூ. | 12 | 0 | 0 |
| ,, | Pt. H. | | 13 | 0 | 0 |
| ,, | A. T. | | 11 | 0 | 0 |
| S. C. | சாயம்போடப்பட்டது | | 23 | 0 | 0 |

சாயம் போடப்பட்ட சின்ட்ஸ் விலை எப்போதும்போ லிருக்கிறது.

---

## Glassgow Mull.

### கிளாஸ்கோ மல்.

செ. 8000, 9000 20 கெஜம் ரூ. 7-8-0.

---

## Photatoes.

### உருளைக் கிழங்கு.

20—3—1914

மார்க்கட் மிகவும் மந்தம் கல்கத்தாவுக்காவது அல்லது மற்றவிடத்திற்காவது. ஏற்றுமதியில்லை பெங்களூர் சரக்குத் தாராளமாய் வருகின்றது. போன மாதத்தைவிட இம்மாதம் விலை கொஞ்சம் ஏறி யிருக்கிறது. நாளது தேதியிலே கண்டி ஒன்றுக்கு ரூபா, 17 முதல் 18 வரை.

---

## Onions.

### வெங்காயம்.

20—3—1914.

மார்க்கட் உறுதியா யிருக்கிறது. "தாரா" என்னும் ஸ்டீமரில் சிங்கப்பூருக்கும் பினங்குக்கும் 3000ம் மூட்டைகள் ஏற்றப்பட்டன இவையன்றி நேற்று மெயில் ஸ்டீமரில் ரங்கோ

னுக்கும் மோல்மீனுக்கும் பதினாயிரம் கூடைகள் ஏற்றப்பட்டன. கைபிருப்பு போதுமான சாக்கு யிருக்கிறது. பருவகாலம் ஆகா யிருக்கிறபடியால் சரக்கு தாராளமாக வருகிறதில்லை

காளது தேதி விலை.

பல்லாரி ரூ. 7-8-0 500 ராத்தல் கொண்ட ஒரு கண்டி.

தாட்பத்திரி நாட்டு வெங்காயம் ரூ. 1-0-0 500 ராத்தல் கொண்ட ஒரு கண்டி.

---

## Tamrind.

### புளி.

மார்க்கட் மந்தம், பினாங், சிங்கப்பூர், மோல்மீன் ஏற்றுமதிக்காக உள்ளூரில் உபாய போகம் செய்யப்பட்டு வருகிறது. சுவேஜக்கும் ஐரோப்பாவுக்கும் ஏற்றுமதி செய்யும் விஷயத்தில் சுறுசுறுப்பு சென்ற மாதத்தைவிட இம்மாதம் கம்மியாயிருக்கிறது. மார்க்கட்டில் போதுமான சாக்கு கையிருப்பிருக்கிறது. பாலக்காட்டு சரக்கு தாராளமாய் வந்து கொண்டிருக்கிறது; இவ்வருடம் போன வருடத்தைவிட அதிகப்படியான மாசூல்; பழைய சரக்கு கைபிருப்பு பூஜ்ஜியம்.

காளது தேதி விலை.—

பழைய புளி ரூபா 95-0-0 கண்டி ஒன்றுக்கு.

புதிய புளி ரூ. 17 ரூ. 19 ,,

பெங்களூர் கோலார் முதல்தரம் ரூ.28முதல்30,

,, இரண்டாம் தரம் ரூ. 25.

---

## Gunnies.

### சாக்கு.

மார்க்கட் மந்தம்; விலைகள் ரொம்பவும் கீழே இறங்கிவிட்டன, எல்லா ரகங்களிலும் வியாபாரிகள் நஷ்டமடைந்து வருகின்றார்கள்; சரக்குகளும் தாராளமாய் வருகிறதில்லை சரக்குகளுக்கும் கிராக்கியில்லை. வியாபாரம் கொஞ்சம்கூட கிடையாது; பல் ஒன்றுக்கு ரூ 42 வீதம் கிறையஞ் செய்யப்பட்ட டுவில் பேலை ரூ. 38-க்கு விற்பனை செய்ய வியாபாரிகள் தயாராக விருந்தபோதிலும். வாங்குவாரில்லை; மற்ற ரகங்களுக்கும் கிராக்கி கிடையாது

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| H. C. | 41×28 | 42 | 0 | 0 |
| do. | 40×28 | 38 | 0 | 0 |
| L. C. | 44×28 | 37 | 8 | 0 |
| do. | 40×28 | 34 | 0 | 0 |
| B. டுவில் | 40×24 | 32 | 0 | 0 |
| H. C, துணி | 100 கெஜம் | 17 | 0 | 0 |
| E. | ஷை | 12 | 0 | 0 |
| 5 பிரி | பெங்காளம் வேயன் | 160 | 0 | 0 |
| 3 பிரி | ஷை | 160 | 0 | 0 |

---

## Metals.

### உலோகங்கள்.

### Iron.

### இரும்பு.

20—3—1914.

உள்ளூர் மார்க்கட்மந்தம்; எந்த தினுசுக்கும் கிராக்கி கிடையாது. காளது தேதி விலை.—

| | | |
|---|---|---|
| பெல்ஜியன் பார் நெ. 2 | ரூ. $21\frac{1}{2}$ | |
| சுவீடிஷ் | 39 | |
| பெல்ஜியன் தகடு | | |
| 6—9 12—13 | ரூ. 27 முதல் 30 | |
| ஊப் இரும்பு | ரூ. 27 | |
| 8 பட்டை ஸ்டீல் | ரூ. $21\frac{1}{2}$ முதல் 22 | |
| வில் ஸ்டீல் | ரூ. 30 | |
| பெல்ஜியன் நெ. 2 உருட்டு துண்டுகள் | ரூ. 23 | |

---

## Chillies.

மிளகாய். 20-3-14

குண்டூர் மிளகாய் மார்க்கட் உறுதியாக விருக்கிறது; உள்ளூரில் உபாயபேரம் நடத்தப்பட்டு வருகிறது. கொழும்பில் பிளேக் வியாபித்துகொண்டு வருகிறபடியால் அவ்விடத்திற்கு உபாயமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. சென்ற வருடம் இந்தக்காலத்தில் எவ்வளவு கையிருப்பு இருந்ததோ அதைவிட இப்போது கையிருப்பு மிகவும் குறைவாகவிருக்கிறது. விலைகள் மிகவும் உறுதியாய் நிற்கின்றன. நாளது தேதி விலை குண்டூர் மிளகாய் $13\frac{1}{2}$ முதல் $13\frac{3}{4}$ வராகன்.

---

பரிமிளகாய் 20-3-14

கையிருப்பில்லை புதிய மாசூல் அடுத்த சித்திரை மாதத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பயிரும் தலைநிப்போயிருப்பதாக பிரஸ்தாபமாக விருக்கிறது.

---

## Coriander.

கொத்தமல்லி. 20-3-14

மார்க்கட் உறுதியாயிருக்கிறது. உள்ளூரில் சுமாரான பேரம் நடந்துவருகிறது. ஏற்றுமதியில்லை. இத்தவருடம் மாசூல் கம்மிப்பட்டுப் போய்விட்டதென்று பிரஸ்தாபமாகவிருக்கிறது. சரக்கு கையிருப்புடையவர்கள் இன்னும் நல்ல விலை வருமென்று சரக்கை விற்பனை செய்யாமல் வைத்திருக்கிறார்கள். நாளது தேதி விலை $10\frac{1}{2}$ முதல் 11 வராகன.

---

## Turmeric.

மஞ்சள். 20-3-14

மார்க்கட் மந்தம். கல்கத்தாவுக்கு உபாய ஏற்றுமதி நடந்து வருகிறது. நாளது தேதி விலை 500 ராத்தல் கொண்ட ஒரு கண்டி ஒன்றுக்கு ரூபாய் 24.

---

## Gingelly.

எள்ளு.

20-3-1914.

மார்க்கட் உறுதி. உள்ளூரில் நல்லபேரம் நடந்து வருகிறது. கும்பகோணம், மதுரை, தஞ்சாவூர், முதலிய விடங்களுக்கு சரக்கு ஏற்றி அனுப்பப்பட்டு வருகிறது, விஜயநகரம் பார்வதிபுரம் அதற்கு சமீபமாகவுள்ள வடதேச ஊர்களுடைய சரக்குகள் தாராளமாய் வந்துக் கொண்டிருக்கின்றன. நாளது தேதி விலை.—

| | | | | |
|---|---|---|---|---|
| சிகப்பு ரகம் | | ரூ. 17-0-0 | 160 ராத்தல் கொண்ட | 1-மூட்டை |
| வெள்ளை | ,, | ரூ. 16-8-0 | ,, | ஷை |
| கறுப்பு | ,, | ரூ. 14-0-0 | ,, | ஷை |

## Cotton.

### பஞ்சு.

20-3-1914.

மார்க்கட் உறுதியாயில்லை. அமெரிக்கா தேசப் பயிர் சுபிக்ஷமாக விருக்கிறதென்று ரிப்போர்ட் வந்திருப்பதை முன்னிட்டு மார்க்கட்டில் தாழ்ந்த விலை வியாபாரத்துக்குவந்துகொண்டிருக்கிறது. விலைஏறுமென்றுஜனங்கள்எதிர்பார்த்துக்கொண்டிருந்தபோதுவிலைகள் படிப்படியாய் இறங்கிக்கொண்டு வருகின்றன. சமீபகாலத்தில் விலை ஏறமாட்டாதென்று பிரஸ்தாபமாயிருக்கிறது. இப்போது பெரும்பாலும் யாதொரு பேரமும் நடத்தப் படுகிறதில்லை. ஆயினும் நாளது தேதி விலை—

| | | |
|---|---|---|
| வெஸ்டர்னர்ஸ் | ரூ. 140 500 ராத்தல் கொண்ட [ஒரு கண்டி | |
| நார்த்தான்ஸ் | ரூ.442 முதல் 142 ரூபா. | |
| கொட்டை யடித்த காக்கி நாடா | ரூ. 141 | ஷை |
| சாதாரண காக்கி நாடா | ரூ. 138 | ஷை |

---

## Timber.

### தேக்கு

20-3-14

உள்ளூர் மார்க்கட் மிகுந்த மந்தமாயிருக்கிறது. நாகப்பட்டணம், கூடலூர் அத்துக்குடி முதலிய துறைமுகப் பட்டிணங்களிலும் மார்கெட் மிகவும் மந்தமா யிருக்கிறது. காரணம் என்னவென்றால் விலைகள் மிகவும் ஏறிகிறன. இந்த வருடம் விலை ஏறுமென்று போன வருடக் கடைசியில் சாக்கு வாங்கி கையிருப்புவைத்துக் கொண்டவர்கள் எல்லாமு இப்போது விற்கமுடியாமல் கொளு முதலில் 100-க்கு 5-வீதம் தள்ளி கிரையஞ் செய்ய தயாராயிருக்கிறார்கள். இப்படி கொளு முதலுக்கு கம்மியாக விற்கதயாராயிருந்தபோதிலும் சென்னை ஆலைகள் வாங்க விருப்பமற்றிருக்கின்றன. ரங்கூன் சரக்கு கல்கத்தாவிலும் பம்பாயிலும் நல்ல விலைக்குப் போகின்றன. என்று ரிபோர்ட்செய்யப்படுகின்றது. உள்ளூரில் இவ்விதமாக தற்காலம் விலை ஏறியிருப்பதற்குக் காரணம் என்ன வென்றால் ரங்கூன் மோல்மீன் முதலிய விடங்களில் காடுகளில் முற்றிமரம் வெட்டப்பட்ட ஸ்தலத்திற்கு 25 மயில் தூரத்திற்கப்பால் போய் மரம்வெட்ட வேண்டியதாயிருக்கிறதென்றும் ஆதலால் செலவு அதிகமாகப்பிடிக்கிற தென்றும் சொல்லப்படுகிறது. மேலும் மரங்களை இழுக்க யானைகளுக்கு மிகவும் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியதா யிருக்கிறதாம். இன்னம்சிலகாலம் வரையில் இந்த உயர்ந்தவிலைதணியுமென்று எண்ணுவதற்கு ஏது வில்லை. வீடுகள் கட்ட அவசியமான தேக்கு வாங்கவேண்டியவர்கள் இந்த உயர்ந்த விலையில் வாங்கியே தீரவேண்டும்.

நாளது தேதி விலை:—

| | | | | | |
|---|---|---|---|---|---|
| L. R. | சரம்— 1 டன்— | ரூ. 200 | 0 | 0 |
| R. | ,, ஷை — | ரூ. 180 | 0 | 0 |
| W. D. | ,, ஷை — | ரூ. 160 | 0 | 0 |

---

## Scant Logs.

### துண்டுகள்.

61 சராசரி — ரூ. 4-8-1. கியூபிக் அடி
1/8 ஷை — ரூ. 3-12-0. ,,

---

## Mustard.

### கடுகு.

மார்க்கட்டு உறுதியாயிருக்கிறது. நல்லபேரம் உள்ளூரில் செய்யப்பட்டு வருகிறது. ஐரோப்பாவிற்குக்கூட போதுமானபடி ஏற்றுமதி செய்யப்படுகிறது. நாளது தேதி விலை.—

பெரிய ரகம் ரூ. 38-0-0 500 ராத்தல கொண்ட ஒரு கண்டி

சின்னரகம் ரூ. 41-0-0. ஷை.

---

## Ground Nuts.

### மணிலாக் கொட்டை.

மார்க்கட் மந்தம். மெசர்ஸ் பெஸ்ட் அண்டு கோவும் கல்கத்தாவர்த்தகர்களும் சூயஸ் ஏற்றுமதிக்காக உள்ளூர் மார்க்கட்டில் வாங்கிக் கொண்டு வருகிறார்கள். மெசர்ஸ் வால்கார்ட் பிரதர்ஸ் என்கிற அவுஸ்காரர்கள் 1000ம் மூட்டை மணிலாப்பருப்பு மார்செல் சுக்கு ஏற்றுமதி செய்தாகள். சீமையிலிருந்து பருப்புக்காக நல்ல ஆர்டர்கள் வரவில்லை. விலைகள் இறங்கிப் போயிருப்பதால் சரக்குகள் தாராளமாய் வருகிறதில்லை. 4 ஆயிரம் பருப்பு மூட்டைகள் மார்க்கட்டில் கையிருப்பிருக்கின்றன. கையிருப்பைக்கரைக்க வியாபாரிகள் நல்லவிலையை எதிர்ப்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாளது தேதி விலை. கொட்டை ரூ. 60 முதல் ரூ. 62 வரையில் தினுசுக்குத தகுந்தபடி பருப்பு—800 இங்கிலீஷ் ராத்தல் கொண்ட ஒரு கண்டிக்கி ரூ. 38-8-0.

---

# SHIPPING REPORT.

## ஸ்டீமர் ரிப்போர்ட்.

### சென்னைத் துறைமுகத்திற்கு வந்துபோகும் ஸ்டீமர்கள்.

| | வருகை. | | | | புறப்பாடு. |
|---|---|---|---|---|---|
| | பெயர். | ஏஜண்டுகள். | எத்தேசமிருந்து வருகிறது. | தேதி. | எந்த ஊருக்குப் போகிறது. |
| | | | | 1914 மார்ச் | |
| 1 | மேரிவெலோரியோ | வால்காட்பிரதர்ஸ் | கல்கத்தா ... | ... 25 | டிரீஸ்ட் ... |
| 2 | டான்பலோ | பெஸ்ட் | வெனீஸ் ... | ... 25 | வெனீஸ் ... |
| 3 | சிட்டி ஆப் லண்டன் | ,, | கல்கத்தா ... | ... 25 | லண்டன் ... |
| 4 | டீரம் | வில்ஸன் | பம்பாய் ... | ... 25 | கல்கத்தா ... |
| 5 | கொலாபா | பின்னி | லண்டன் . | ... 27 | கல்கத்தா ... |
| 6 | ஈஜிப்ட் | பெஸ்ட் | கல்கத்தா ... | ... 27 | லண்டன் ... |
| 7 | நியுலேலியா | பின்னி | கல்கத்தா ... | ... 29 | லண்டன் ... |
| 8 | ஓகியா | பின்னி | கல்கத்தா ... | ... 30 | பம்பாய் ... |
| 9 | சுபேதார் | வில்ஸன் | பம்பாய் ... | ஏப்ரி 1 | கல்கட்டா ... |
| 10 | டீஸ்டா | பின்னி | ஸ்டிரேயிட்ஸ் ... | ... 1 | ஸ்டிரேயிட்ஸ் ... |
| 11 | அம்குஜி | பாரி | கல்கத்தா ... | ... 15 | நேட்டால் ... |

# INDUSTRIES.

## கைத்தொழில்.

### Aluminium Cloth.

### அலுமினியத்தில் வஸ்திரங்கள் செய்ய முயற்சி.

உலகத்தில் உற்பத்தியாகி நடமாட்டத்திலிருக்கும் உலோகங்களில் அலுமினியமுமொன்றென்பது உலகமறிந்தவிஷயம். ஆனால், அலுமினியபாத்திரங்களுக்கு அதன் ஆரம்பத்திலிருந்தபெருமை தற்போதில்லை.யானாலும் அதன்வியாபாரக் கடைகள்எங்கும் விசேடப்பட்டிருப்பது நாம்சொல்ல வேண்டுவதில்லை. இந்த அலுமினியத் தொழில் இன்னும் விர்த்திகொள்ளும் நோக்கமாக அலுமினியத்தைநூல்போன்று கம்பியாக இழுத்துப் பட்டுடனும் மற்றும் நூல்களுடனும் சேர்த்து உயர்ந்தவஸ்திரங்கள் செய்யப்போவதாக ஓர் வதந்தி யுலாவுகிறது. அன்றியும், இந்த அலுமினிய வஸ்திரத்துக்கு இஷ்டமான நிறங்களைக் கொடுக்கவும் சாத்தியமாகு மென்றுஞ் சொல்லப்படுகின்றது.

---

### Spectacles for Cows.

### பசுக்களுக்கு மூக்குக் கண்ணாடி.

பர்மிங்ஹாம் என்ற ஊரில் ஓர் வர்த்தகர் மூக்குக்கண்ணாடித் தொழிலையே செய்து அதிக திரவியத்தைச் சம்பாதித்தனராம். அநேகமாய் இக்கண்ணாடிகள் ஸைபீரியாவிலுள்ள ஜனங்களேவாங்குகிறார்களாம். இப்படிஇவர்கள் வாங்குவதற்குக்காரணம் அத்தேசத்தில் பனிக்கட்டிமிகுதியென்றும் அப்பனிக்கட்டிகள் நிறைந்த புற்களை மாடுகள் மேயும்போது அப்புற்களின்மேல் சூரியவெப்பம்பட்டதும் பசுக்களுக்கு கண் தெரியாமல் போய்விடுகிறதென்றும், அதனால் மேற்படி மூக்குக்கண்ணாடியை தோலில் மாட்டி மாடுகளுக்கு கட்டிவிட்டால் அவைகளுக்கு கண் நன்றாய்த் தெரிகின்றதென்றும் சொல்லப்படுகிறது,

---

### A New Machine.

### ஒரு புதிய எந்திரம்.

"கிறெப்போகிறுப்" பென்னும்ஓர்வித எந்திரம் இத்தாலியா இஞ்சினீயரால் கண்டுபிடித்திருக்கப்பட்டிருக்கிறதாம். இந்த எந்திரத்தை ஒரு வீட்டின்தெருவாயலுக்கு முன்பாக கட்டிவைத்தால்அவ்வீட்டிற்குள் போவோர்வருவோர்களின்உருவங்களை அப்படியே பதிவுசெய்துகொள்ளுகிறதாம். இந்த எந்திரத்தின் சூழ்ச்சியால் திருடர்களகப்படுதலும் வெகு எளிதாகுமல்லவா?

---

### A man in Female Garb.

### பெண் வேடதாரியின் மோசம்.

பிரசலா என்னுமூரில் தனவந்தனான ஒரு வியாபாரியிடம் காரால்ரேஸலா எனப் பெயர் பூண்ட ஒருவன் பார்ப்போர் எளிதில் மயங்கும்படியான பெண்வேடந் தரித்து வந்து அவ்வியாபாரியை மயக்கி மணஞ் சேய்துகொண்டானாம். ஆனால், மணக்கோலம் முடிந்த 2-மணிநேரத்திற்குள் சுமார் 12,000 பவுன் விலையுள்ள ஆபரணங்களை அபகரித்துக்கொண்டு மறைந்து போய்விட்டானாம். முடிவில் இப்பெரும்மோசக்காரன் ஹாம்பர்க் என்றவிடத்தில் அகப்பட்டு இரண்டு வருஷக் காவல்தண்டனை யடைந்தான்.

---

## Leather Dress.
## காட்டேலிகள் தோலால் உடைகள்.

ஹாலந்து தேசத்து ஜனங்கள் காட்டெலிகளுடைய தோலால் உடைகள் தயார் செய்கிறார்களாம். இத்தோல்கள் அநேகமாய் அமெரிக்காவிற்கு அனுப்பப்படுகிறதாம். இவ்வியாபாரத்தால் சென்றவருஷம் ஒருவர் 15,000 பவுன் சம்பாதித்தாராம்.

## Occupations of Japanese Girls.
## ஜப்பான் தேசத்துப் பெண்களின் தொழில்.

ஜப்பான் தேசத்துப் பெண்கள் எத்தொழிலிலும் வல்லவர்களென்பதுயாவர்களுமறிவார்கள். இப்பெண்கள் குளிர்காலம் தவிர அதாவது தை மாசி பங்குனி, மற்ற மாதங்களில் கடலுக்கடுத்து வசிக்கும் பெண்கள் கடலில் இறங்கி முத்து குளிக்கும் தொழிலைச்செய்கிறார்களாம். இவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கூட நீந்தக் கற்றுக்கொடுக்கிறார் ளென்றும் சிறு பெண்களாயுள்ளவர்கள் 12-வயது வரையில் பள்ளியில் வாசித்துவிட்டுப் பின்பு முத்துக்குளிக்கும் தொழிலையே அநுசரிக்கிறார்க ளென்றும் சொல்லப்படுகின்றது. அப்பெண்கள் முத்து குளிக்கும்போது தாங்கள் இயற்கையாய்த் தரித்துள்ளஆடையை களைந்துபோட்டுஅதற்குண்டான உடைகளைத் தரித்துக் கூந்தலை யிருக்கிக் கட்டிச் செல்வதுடன் கண்ணில் தண்ணீர் படாதபடி கண்ணாடியும் தரித்துக்கொள்ளுகிறார்களாம் என்று விஸ்வகர்மா குலோபகாரிகூறுகின்றது.

## An Industrial Depot at Bangalore.
## பங்களூரில் ஒரு கைத்தொழில் ஸாமான்கள் டெப்போ.

மைசூர் தொழிலாளிகள் செய்யும் ஸாமான்களை ப்ரபலமாகத்தெரியும்படி செய்வதற்காகவும் மேற்படி தொழிலாளிகள் தற்காலம் ஜனங்களுக்கு என்னென்ன விதமான ஸாமான்கள் வேண்டுமென்பதை யறிந்து தங்களுடைய ஸாமான்களை அதற்கிணங்க செய்வதற்கு ஸௌகர்யம் உண்டாக்குவதற்காகவும் ஒரு கைத்தொழில் டெபோ ஏற்படுத்தவேண்டுமென்று மைஸூர் கைத்தொழில் வ்யாபாரக் கமிட்டி கவர்ன்மெண்டுக்கு ஒரு ப்ரேரணை செய்தது. கவர்ன்மெண்டார் அந்த ப்ரேரணையை ஏற்றுக்கொண்டு பங்களூரில் ஒரு டெபோ ஏற்படுத்தும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள். என்று "பிழைக்கும்வழி" அறிவிக்கிறது.

---:o:---

# AGRICULTURE.

## விவசாயம்.

### Onion Cultivation.

### சமுத்திரக்கரையிலுள்ள மணல் நிலங்களில் வெங்காயச் சாகுபடி.

நாம் சென்ற மாதத்தில் திருநெல்வேலி ஜில்லா திருச்செந்தூர் தாலூகா குலசேகர பட்டணத்திற் கருகாமையிலுள்ள நமது கரைச் சுத்து நிலங்களைப் பார்க்கப் போனபோது நாம் இதுவரையில் பார்த்தும் கேட்டுமறியாத சமுத்திரக்கரையிலுள்ள மணலில் வெங்காயக் சாகுபடி செய்து பயிர் அதிக சுபிக்ஷமா யிருந்ததைக் கண்டு வியப்புற்று விசாரிக்கையில் ஆவவூரிலுள்ள மணல் பூராவிலும் வெங்காயம் சாகுபடி செய்வது சகஜ மென்றும் அது தக்க இலாபத்தைத் தருகிற தென்றும் தெரியவந்தது. நமது ஜில்லாவில் நமக்குத் தெரிந்தவரையில் சமுத்திர மணலில் வேறு எவ்விடத்திலும் இப்பயிர் செய்யப்படவில்லையாதலால் சமுத்திரக்கரையிலுள்ள ஒவ்வொரு கிருஷிகரும் இந்தப் பயிரை இலாபகரமாய்ச் செய்யலா மென்றும் நினைத்து நமது சந்தா நேயர்களின் உபயோகத்திற்காக இங்கு அதைப்பற்றி விவரமாய் எழுதுகிறோம்.

நிலம்:—அவ்விடத்திலுள்ள நிலம் முழுவதும் சமுத்திர மணலைத் தவிர வேறு மண் கிடையாதாகையால் சமதளமான எந்தப்பாகத்திலுள்ள மணலிலும் இப்பயிர் செய்யலாம். முதலில் மணலை மேடுபள்ளங்களில்லாமல் சமதளப்படுத்துகிறார்கள்!

வேலிகட்டல்:—வெய்காயம் நட உத்தேசிக்கும் நிலத்தைச்சுற்றி ஒரு அடிக்கு ஒரு பனைமட்டையாக நட்டு தென்னம் மட்டைகளை நீட்டுப்போக்கில் குறுக்காக வைத்து மட்டைகளைச் சேர்த்துக் கட்டுகிறார்கள். பின் வேலம் முள் கொண்டுவந்து இம்மட்டைகளைச் சேர்த்து இணைத்துவிடுகிறார்கள். இப்படிச் செய்தால் ஆடு மாடுகள் முதலான பிராணிகள் இதற்குள் போக முடியாது.

வண்டலடித்தல்,—கால் ஏக்கர் நிலத்திற்குச் சுமார் 40 வண்டி வண்டலடித்து மணலோடு கலந்து சுமார் 10-கிடை ஆடு போட்டு வெங்காயம் நடுகிறார்கள்.

கிணறெடுத்தல்.—அவ்விடத்தில் கிணறெடுத்து அங்கு அகப்படும் கற்களால் கட்டிவிட ரூ. 5 (ஐந்து) தான் பிடிக்கிறது. கால் ஏக்கர் நிலத்திற்கு ஒரு கிணறு வீதம் அடித்துக்கொள்கிறார்கள், ஏனென்றால் மணலில் தண்ணீர் அதிக தூரம்போனால் மண்ணிற்குள்ளேயே ஊறிப்போகு மென்று நினைத்து நடு வாய்க்கால் மட்டும் இக்கற்களால் கட்டி அங்கிருந்து இரண்டடி சதுரப் பாத்திகள் செய்து மண்வெட்டி முதலான யாதொரு ஆயுதங்களு மில்லாமல் கையினாலேயே மடைகளைத் திறந்து தண்ணீர் பாய்ச்சி அடைக்கிறார்கள்.

வெங்காயம் நடுங்காலம்.—கார்த்திகை மாதம் ஒரு தரமும் வைகாசி முதல் ஆடிவரையில் ஒரு பட்டமுமாக வருஷத்திற்கு இரண்டு முறை நடுகிறார்கள். ஒரு கிணற்றிறவையில் சாகுபடியாகும் நிலமாகிய கால் ஏகராவுக்குப் பிடிக்கும் செலவு இலாபம் முதலியவைகளை இங்கு விவரமாய் எழுதுகிறோம்.

### முதல் பிடிக்கும் செலவு.

| | ரூ. | அ. | பை |
|---|---|---|---|
| நிலம் மேடுபள்ளங்க ளில்லால் திருத்த | 10 | 0 | 0 |
| கிணறடித்து | 5 | 0 | 0 |
| வண்டலடிக்க் | 10 | 0 | 9 |
| ஆட்டுக்கிடை வைக்க | 10 | 0 | 0 |
| வேலியடைப்பு முதலிய சில்லரை | 10 | 0 | 0 |
| கிலாப்போட கால்கட்ட | 5 | 0 | 0 |
| ஆக மொத்தம். | 50 | 0 | 0 |

இந்த ரூ. 50-ம் நிலம் நிறத்தி சீர்ப்படுத்தும் செலவில் ஏற்படுவதாலுப் வருஷா வருஷம் இச்செலவுகள் செல்வதில்லை யாதலாலும் இதை நிலக்கிரயத்தோடு சேர்த்து இதற்கேற்படும் வட்டிமட்டும் சேர்த்துப் பார்க்கவேண்டும்.

### வருஷா வருஷம் ஏற்படும் செலவு.

| | | | |
|---|---|---|---|
| எரு | 5 | 0 | 0 |
| 30 துலாம் விதை வெங்காயம் துலாம் ஒன்றுக்கு 8 அணு வீதம் (ஒரு துலாம் என்பது 20 இராத்தல்). | 15 | 0 | 0 |
| தண்ணீர் இறைப்பு $2\frac{1}{2}$ மாதம் | 18 | 12 | 0 |
| நிலக்கிரயத்திற்கும் சீர் திருத்திய செலவிற்கும் வட்டி 100–க்கு மாதம் 1 வட்டியாக ஒரு பயிருக்கு | 6 | 0 | 0 |
| மாசூல் எடுத்தல், வைத்தல், சரககாககல் | 5 | 4 | 0 |
| ஆகமொத்தம். | 50 | 0 | 0 |

காலே 4-மணி முதல் 6-மணி வரையில் அவரவர்களே தண்ணீர் இறைத்துக் கொள்வதால் இச் செலவும் அவர்களுககு இலாபந்தான்.

வருமானம்:—200 துலாம் வெங்காயம் குறைந்தது துலாம் ஒன்றுக்கு 6 அணுவாக 75 0 0

துலாம் ஒன்று 6 அணுவுக்கு குறைவாகிறதில்லை. நோய் நொடிகள் விழுந்து மாசூல் இவ்வளவு அதிகம் காணுவிட்டால் அதற்கேற்றபடி 1 துலாம் வெங்காயம் ரூபா ஒன்று வரையில் விற்கிறது.

கால் ஏக்கர் நிலத்தில் ஒரு தடவையில் இலாபம். 25 0 0

அவரவர்கள் வேலைக்குப்போகுமுன் காலை 4-மணி முதல் 6-மணி வரையில் தண்ணீர் இறைத்து விட்டுப் போவதால் இறவைக்குப் போட்டிருக்கும் செலவரகிய ரூ. 18-12-0-ம் இவர்களுக்கு இலாபமாகிறது. இப்படி வருஷம் ஒன்றுக்கு 2-தரம் வெங்காயச் சாகுபடி செய்வதோடு முதல் மாசூல் தைமாசக் கடைசியில் அறுவடை செய்தபின் வேறு உரம் முதலானது போடாமல் கேழ்வரகுப் பயிராவது, வெண்டை கத்தரி மிளகாய் முதலிய காய்கறிகளாவது போட்டு தக்க இலாபம் அடைகிறார்கள். இவ்விடத்திலுள்ள பறையர், இடையர் முதலான, ஒவ்வொருவரும் கால் ஏக்கர் வெங்காயத் தோட்டமாவது பயிர் செய்யாம லிருப்பதில்லை. காலையில் யதாப்ரகாரம் அவரவர்கள் வேலைக்குப் போவதற்கும் யாதொரு ஆட்சேபனை யில்லை.

மாசூல் எடுத்தல்:—காலையில் வெங்காயத் தாள்களோடு பிடுங்கி அங்கங்கே கும்பல் கும்பலாய் தாள்களோடு போட்டு வைத்துவிடுகிறார்கள். மறுநாட் காலையில் தாள்களெல்லாம் உள்புறமாகவும் கிழங்குகள் வெளிபுறமாகவும் அடுக்கி வயலிலேயேவைத்து மேலே ஓலைபோட்டு மூடிவைக்கிறார்கள். சில நாட்கள் சென்றபின் இவைகளை யெல்லாம் தாள்களோடு வீட்டில் கொண்டு போய் பத்திரப் படுத்திவைத்து விற்கிற காலத்தில் தான் தாள்களை அரிகிறார்கள். இப்படித் தாள்களோடு வைக்கப்படுவதால் அநேக மாதங்கள் வரையில் வெங்காயம் கெடாமலும் அழுகிப்போகாமலும் இருக்

கிறது. இப்படி வைத்திருப்பதில் எந்த சமயத்தில் வெங்காயம் விலை ஏறுகிறதோ அந்த சமயத்தில் விற்க முடிகிறது. சாதாரணமாய் வெங்காயம் சாகுபடி செய்யும் நமது சந்தாநேயர்கள் இம்முறையைக் கையாடுவதால் தக்க இலாபம் அடைவர்க ளென்பதில் சந்தேகமில்லை.

சமுத்திரக்கரை யோரங்களி லுள்ள நமது சந்தா நேயர்கள் பரீட்சார்த்தமாய் கொஞ்ச நிலத்திலாவது சாகுபடி செய்து பார்த்துத் தக்க இலாபம் அடைவார்க ளென்று நம்புகிறோம். மணல் நிலமானதால் நித்தியம் தவறுமல் தண்ணீர் இறைத்து வரவேண்டு மென்பதை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும் என்று கிருஷிகளில் எழுதப்பட்டிருக்கிறது.

---

## THE IMPROVEMENT OF CATTLE.

### கால் நடைகளின் அபிவிருத்தி.

:(*):

இந்தியாவில் கால்நடைகள் விவஸாயத்தொழிலுக்கு வேண்டியவளவுக்குக் குறைவாயிருக்கின்றனவென்றும் இப்போது இருக்கும் கால்நடைகளுக்குத் தகுந்த வளவு தீனியகப்படுவது கஷ்டமாயிருப்பதோடு அவைகள் நல்ல நிலைமையிலில்லை யென்றும் பலர் சொல்லி வருகிறார்கள். விவஸாயத் தொழிலுக்குக் கால் நடைகள் எவ்வளவு தூரம் போதாமலிருக்கின்றன வென்பதைப்பற்றி ஒரு நிருபர் 'ஹிந்துஸ்தான் ரெவ்யூ' பத்ரிகையில் ஒரு வ்யாஸம் எழுதியிருக்கிறார். அவர் கொடுக்கும் பின்வரும் கணக்குகளால் இந்தியாவிலும் அதிலுள்ள பல மாகாணங்களிலும் இத்தனை கால் நடைகள் இருக்கின்றன வென்றும், ஸாகுபடியாகும் நிலங்கள் இவ்வளவு இருக்கின்றனவென்றும், ஒன்றுக்கொன்றுள்ள சராசரி விகிதம் இப்படியிருக்கிறதென்றும் தெரியவரும்.

| மாகாணம். | காளை மாடுகளும் எருமைக்கடாக்களும் | ஸாகுபடியாகும் நிலத்தின் விஸ்தீரணம் (ஏக்கரில்) | ஒரு எருத்துக்கு மாட்டுக்கு எத்தனை ஏக்கர் நிலமிருக்கிறதென்பது. |
|---|---|---|---|
| | லக்ஷம். | லக்ஷம். | |
| பிரிட்டிஷ் இந்தியா ... | 456 | 22,30 | 5.0 |
| வங்காளம் ... | 104 | 3,66 | 3.5 |
| பம்பாய் ... | 29 | 2,53 | 8.5 |
| சென்னை ... | 73 | 3,37 | 4.5 |
| ஆக்ரா ... | 75 | 2,69 | 3.6 |
| பஞ்சாப் ... | 48 | 2,48 | 5.1 |
| மத்தியமாகாணங்கள் ... | 35 | 1,77 | 5.0 |
| அயோத்தியை ... | 33 | 9,3 | 2.9 |

இந்தக் கணக்குகளால் இந்தியாவின் எந்த மாகாணத்திலும், மூன்று ஏக்கருக்கு ஒரு மாடு வீதங்கூட இல்லையென்று தெரிய வருகிறது. பம்பாயிலோ $8\frac{1}{2}$ ஏக்கருக்கு ஒரு கால் நடையாக இருந்து வருகிறது, அங்கே 1910-11-ம் வருஷத்தில் கால்நடை ஸென்ஸஸ் கணக்கு எடுக்கப்பட்டது. அதற்குப்பிறகு அகமெதாபாத் ஜில்லாவிலும் அதற்குப் பக்கத்திலும் இரண்டு பஞ்சங்கள் நேர்ந்ததால் அங்குள்ள கால் நடைகளின் நிலைமை இன்னம் ரொம்பவும் கேவலமாகவேயிருக்கும்.

ஒவ்வொரு ஏருக்கும் எத்தனை ஜோடி எருதுகள் இருக்கின்றனவென்பது பின் வரும் கணக்கால் தெரியவரும்.

| மாகாணம். | எருதுகள் எருத்தினை ஜோடிகள் என்பது. | ஏர்கள். | ஒரு ஏருக்கு எருத்தினை ஜோடி எருதுகள். | ஒரு எருமைக்கொண்டு எத்தினை ஏக்கர் உழப்படுகிறது. |
|---|---|---|---|---|
| | லக்ஷம் | லக்ஷம். | | |
| ப்ரிட்டிஷ் இந்தியா ... | 228 | 196 | 1·1 | 5 |
| வங்காளம் ... | 52 | 47 | 1·1 | 3·5 |
| பம்பாய் ... | 15 | 10 | 1·4 | 8·5 |
| சென்னை ... | 36 | 38 | 0 95 | 4·5 |
| ஆக்ரா ... | 38 | 33 | 1·2 | 3 6 |
| பஞ்சாப் ... | 24 | 21 | 1·2 | 5 1 |
| மத்ய மாகாணங்கள் ... | 18 | 11 | 1·6 | 5·0 |
| அயோத்தியை ... | 17 | 15 | 1·1 | 2·9 |

மேலே காட்டியுள்ளபடி கணக்கின்படி, ஏர்களுக்குப்போது கால்நடைகளுள்ள ப்ரதேசம் மத்ய மாகாணங்கள் ஒன்றுதான். ஆனால் இந்தக்கணக்கில் கொடுக்கப்பட்டிருக்கும் எருதுகளின் ஸங்க்யையில் வண்டியிழுக்க மாத்ரம் உபயோகப்படும் எருதுகளின் ஸங்க்யையைக் குறைக்கவில்லை. வண்டி மாடுகளின் ஸங்க்யை ரொம்பவும் ஜாஸ்தியாயிருக்கும் என்பது நிச்சயம். வண்டி மாடுகளின் தொகையைக் குறைத்துவிட்டால் மத்ய மாகாணங்களில்கூட உழுவதற்குப் போதுமான எருதுகள் இருக்கமாட்டாவென்று தெரியவரும்.

இப்படி மாடுகள் குறைவாயிருப்பதால் ஜனங்களுக்கு இரண்டு விதத்தில் கஷ்டங்கள் ஏற்படுகின்றன. இந்தியாவிலுள்ள விவஸாயிகளுக்கு ரஸாயன உரங்கள் தயார்செய்து உபயோகிக்கத் தெரியாமலிருப்பதால் அவர்கள் கால்நடைகளின் சாணத்தையே வெகுவாய் எருவாக உபயோகிக்கவேண்டியிருக்கிறது. இந்தியாவில் கறவைமாடுகள் உள்பட 9-கோடி கால்நடைகள்தான் இருக்கின்றன. ஸாகுபடி செய்யப்படும் நிலமோ $22\frac{1}{4}$ கோடி ஏக்கராகும் சாணத்தில் பெரும்பாகம் வரட்டி தட்ட உபயோகப்பட்டுப் போகிறது. இதைக் கணக்கில் சேர்த்துக்கொள்ளாவிட்டாலும், $2\frac{1}{2}$ ஏகர் நிலத்துக்கு ஒரு மாட்டின் எருத்தான் கிடைப்பதாகிறது.

இன்னொரு விஷயமென்னவென்றால் இந்தியாவில் கறவை மாடுகள், பசுக்களும் எருமைகளுமாக, 4 கோடிதான் இருக்கின்றன. இவைகள் ஆயுளில் பாதிகாலம் பால்கொடுப்பதில்லை. இந்தியாவின் ஜனத்தொகை $31\frac{1}{2}$ கோடியாகையால் இந்தக் கணக்கின்படி 15 பேருக்கு வேண்டிய பாலுக்கு ஒரு கறவை மாடாக ஏற்படுகிறது. இப்படியிருக்க சிசுமரணம் அதிகமாயிருப்பதற்குக் கேட்பானேன்?

இந்த நிலைமையை சரிப்படுத்துவதற்கு ஒரு வழியிருக்கிறது. அது என்னவென்றால் மிருக வைத்ய உதவியை அதிகப்படுத்துவதே. தற்காலம் இந்தியா முழுவதிலும் 1,09,000 கால்நடைகளுக்கு ஒருவர் வீதம் ம்ருக வைத்தியர்கள் இருந்து வருகிறார்கள். சில மாகாணங்களில் அதிகமாயும் இருக்கிறது. ஆகவே ம்ருக வைத்யர்கள் வேண்டிய அளவுக்கு இல்லையென் றேற்படுகிறது. ம்ருக வைத்ய உதவியை தகுந்தபடி அபிவ்ருத்தி யடையும்.—என்று அந்த நிருபர் எழுதியிருக்கிறார்.

கால் நடைகளின் நிலைமையை அபிவ்ருத்தி செய்ய ம்ருக வைத்ய உதவியை ஜனங்களுக்குள் பரவச்செய்ய வேண்டியது அவஸ்யமென்

பதை சென்னை ம்ருக வைத்ய டிபார்ட்மெண்டார் அறிந்துகொண்டு, பெரிய ம்ருக வைத்ய சாலைகள் சீக்கிரம் ஸ்தாபிப்பது முடியாதென்று எண்ணி, சில இடங்களில் சிறிய ம்ருக வைத்ய மருந்துச்சாலைகள் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று சென்றமாஸ ஸஞ்சிகையில் தெரிவித்திருந்தோம். அநேகர் கால்நடைகளுக்கு ஜலவஸதியும் மேய்ச்சல் தரைவசதியும் செய்து கொடுக்கவேண்டும் என்றும், நல்ல ஜாதி கால்நடைகள் வ்ருத்தி செய்வதற்காக ப்ரத்யேகமான முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லி வருகிறார்கள். ஸமீபத்தில் சென்ற மாஸத்தில் சென்னை லெஜிஸ்லேடிவ் கௌன்ஸிலில் ஆனரபிள் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் கால்நடைகளின் நிலைமையைப்பற்றி ஆராய்ச்சி செய்ய ஒரு கமிட்டி நியமிக்கவேண்டுமென்று ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானம் பின்வருமாறு:—

சென்னை ராஜதானியில் அந்தந்த ப்ரதேசத்து ஜாதிகளாயும் பொதுவாயும் உள்ள எருத்துமாடுகள் கறவைமாடுகள் ஆகிய இவைகளின் தற்கால நிலைமையைப்பற்றியும், கால்நடைகள், கால்நடைகளின் உணவு ஆகிய இவைகள் எப்படியிருக்கின்றன, இவைகள் எவ்வளவு மட்டில் ஜனங்களுக்கு வேண்டிய அளவுக்குக் கிடைக்கின்றன, இவைகளின் விலை எப்படி உயர்ந்திருக்கிறது, ஆகிய இவைகளைப்பற்றியும் விசாரித்து ரிபோர்ட்டு செய்யவும், இவைகளைச் சீர்திருத்த என்ன செய்யலாம் என்பதைப்பற்றி யோசனைகள் சொல்லவும், உத்யோகஸ்தர்கள், உத்யோகஸ்தரல்லாதவர்கள், ஒரு நிபுணர் ஆகிய இவர்கள் சேர்ந்த ஒரு கமிட்டியை ஆலோசனை ஸபையிலுள்ள கவர்னர் நியமிக்க வேண்டுமென்று இந்தக்கௌன்ஸில் சிபார்சு செய்கிறது.

இந்தத் தீர்மானத்தை ப்ரேரிக்கையில் ஆனரபிள் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார், இந்த ராஜதானியில் 100-க்கு 70 பாகம் ஜனங்கள் தங்கள் விவஸாய வேலைக்குக் கால்நடைகளையே நம்பியிருப்பதாகவும், கால்நடையே விவஸாயிகளுடைய ஐச்வரியமென்று பல அதிகாரிகள் ஒப்புக்கொண்டு அவைகளுடைய நிலைமையை உயர்த்தவேண்டியது அவச்யமென்று சொல்லி வந்திருப்பதாகவும், கால்நடைகளின் தற்போதைய நிலைமை த்ருப்திகாமாயில்லையென்றும் அவைகள் ரொம்ப தாழ்ந்த நிலைமையடைந்திருந்தும் விலை மாத்ரம் 100-க்கு 150-பங்கு அதிகமாயிருக்கிறதோடு, வருஷாவருஷம் வேர்க்கடலை அன்ய நாடுகளுக்கு ஏற்றுமதியாவதாலும், மேய்ச்சல் தரைகள் குறைந்துபோனதாலும், அவைகளுக்கு தீனியகப்படுவது கஷ்டமாயிருக்கிறதென்றும், க்ராமங்களில் காளைமாடுகளை வளர்த்து வ்ருத்திசெய்வது குறைந்துபோனதால் நல்ல ஜாதி கால்நடைகள் குறைந்து வருகின்றனவென்றும், கால்நடைத்தீனியின் விலை ரொம்ப அதிகமாகிவிட்டதால் ரயத்துகள் பொலிகாளைகள் வைத்து வளர்க்கமுடியாமலிருக்கிறார்கள் என்றும், ஆகையால் ஜனங்களின் பெரும்பாகத்தாருடைய ஸௌகர்யத்தை உத்தேசித்துத் தாம் கொண்டுவந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டார் வற்றுக்கொள்வார்கள் என்று தாம் நம்புவதாகவும் சொன்னார்.

இதைத் தாங்கிப்பேசின ஆனரபிள் மிஸ்டர் அகமெத் தம்பி மரக்காயர் கால்நடைகள் நோய்களால் ரொம்ப ஜாஸ்தியாக இறந்துபோவதை உத்தேசித்து தீர்மானத்தில் கேட்டுக்கொண்டபடி ஒரு கமிட்டி நியமிக்கவேண்டியது ரொம்ப அவச்யமென்று சொன்னார்.

கவர்ன்மெண்டுக்காக எழுந்துபேசின ஆனரபிள் ஸர் ஜான் அட்கின்ஸன், இந்த ராஜதானியில் கால்நடைகளை அபிவ்ருத்தி செய்வதைப்

பற்றியும் அவைகளை வைத்து ஸம்ரக்ஷணை செய்வதைப்பற்றியும் விசாரணை செய்வதற்காக கவர்ன்மெண்டார் மிஸ்டர் ஸாம்ப்ஸனை ப்ரத்யேகமாய் நியமித்தார்கள் என்றும் அவர் எழுதியிருக்கும் ரிபோர்ட்டில் ஆராய்ச்சி செய்ய வேண்டுமென்று தீர்மானத்தில் கேட்டுக்கொண்டிருக்கும் விஷயங்களெல்லாம் ஆராய்ச்சிசெய்து எழுதப்பட்டிருக்கின்றன வென்றும், அந்தப்பெரிய ரிபோர்ட்டைப்பற்றி கவர்ன்மெண்டார் ஆலோசித்து வருவதாகவும், கவர்ன்மெண்டார் அந்த ரிப்போர்ட்டின்மேல் ஆர்டர்கள் போடும்போது ஆனரபிள் மிஸ்டர் சிதம்பரநாத முதலியாரும், மிஸ்டர் அகமெத்தம்பி மரக்காயரும் சொல்லிய விஷயங்களையும் கவனிப்பார்கள் என்றும் சொன்னார். இன்னும் அந்த ரிப்போர்ட்டின்மேல் என்னவிதமான ஆர்டர் போடுவதென்பது இன்னம் நிச்சயமாகவில்லை யென்றும், ரிப்போர்ட்டில் கண்டிருக்கிற எல்லா விஷயங்களைப்பற்றியும் முடிவான ஆர்டர் போட்டு விடுவார்கள் என்று சொல்வதற்கில்லையென்றும், சில விஷயங்களைப்பற்றி மறுபடியும் கவனிக்க வேண்டி யிருக்கலாமென்றும் அப்போது அவச்யமென்று தோன்றினால் உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்களின் அபிப்ராயத்தையும் கேட்பார்கள் என்றும், இப்போது வெளியிலிருந்து அபிப்ராயம் கேட்கவேண்டியது அவச்யமென்று கவர்ன்மெண்டார் நினைக்கவில்லை யென்றும், கவர்ன்மெண்ட் ஆர்டர் போட்டாகிறவரையில் அந்த ரிபோர்ட்டை கௌன்ஸில் வைக்க முடியாதென்றும், ஆகையால் இந்த் தீர்மானத்தை அக்ஷேபிப்பதாயும் சொன்னார்.

ஆனரபிள் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் மறுபடியும் எழுந்து பேசினபோது, மிஸ்டர் ஸாம்ப்ஸனின் ரிப்போர்ட் என்ன ப்ரேரணைகள் செய்யப்பட் டிருக்கின்றன என்பது பொது ஜனங்களுக்குத் தெரியவில்லை யென்றும், அவைகளைப் பற்றி பொது ஜனங்களின் அபிப்ராயத்தை கவர்ன்மெண்டார் தெரிந்து கொள்ள வேண்டியது அவச்ய மென்றும், ஆர்டர்கள் போடுமுன் ரிபோர்ட்டை ப்ரசுரம் செய்வதில் கவர்ன்மெண்டுக்கும் பொது ஜனங்களுக்கும் ரொம்ப நன்மை ஏற்படு மென்றும் சொன்னார். ஸர்ஜான் அட்கின்ஸன் ரிப்போர்ட்டை ப்ரசுரம் செய்ய முடியாதென்று பதில் கூறினார். கடைசியில் மிஸ்டர் சிதம்பரநாத முதலியார் தமது தீர்மானத்தை வாப்ஸ் வாங்கிக் கொண்டார்.—பிழைக்கும் வழி.

———:———

# CO-OPERATION.

## ஐக்கிய முயற்சி.

### கிராமவாசிகளும் கோ-ஆப்ரேஷனும்.

திருப்பூரில் சில வருஷகாலமாக ஆடுமாடுகள் குதிரைகள் முதலிய வற்றில் நல்ல தினுசுகளாகப் பொறுக்கி சந்தை கூட்டிவருவதில, இந்தக் காரியம் என்னததிற்காக நடந்து வருகிறதென்பது இப்போழுது அனேகமாய் இங்கு வந்திருப்பவரனைவருக்கும் தெரியும். தெரியாத சிலருக்கு இக்காரியம் நிர்வகித்து வரும் விவசாய சங்கத்தார் விளக்கிக் காட்டுகிறார்கள். ஆதலால் அதைப்பற்றி நான் பேசப்புகவில்லை.

ஆனால் இப்படிக் கூடும் சந்தையில் பல திக்குகளிலிருந்தும் கிராம வாசிகளாகிய மகாஜனங்கள் நூற்றுக்கணக்காக வந்திருப்பதாலும் அவர்களுடைய க்ஷேமத்திற்குக் கோ-ஆபரேஷன் என்னும் பரஸ்பர சகாய முறையை யனுசரித்து உழைப்பது இனி வெகு அவசியமா யிருப்பதாலும், அவ்விஷயத்தைக் குறித்து ஏதோ தெரிந்ததை இச்சந்தர்ப்பத்தில் பேசும்படி அந்த டிபார்ட்மெண்டு அதிபதிகளிலொருவராகிய திருச்சி அஸிஸ்டெண்டு ரெஜிஸ்ட்ராரவர்கள் ஆக்ஞாபித்தபடியாலும், நான் உங்கள் முன்னிலையில் இரண்டொரு அம்சங்களைப்பற்றிப் பேச உத்தேசித்திருக்கிறேன்.

நமது கிராமங்களையும் அவற்றிலுள்ள மகாஜனங்களையும் கவனிப்பவருக்குச் சில லக்ஷணங்கள் பொதுவா யிருப்பது யாருக்கும் எளிதில் விளங்கும். அனேகமாய்க் கிராமவாசிகளுக்கு கிருஷி என்றால், பூமி சாகுபடி செய்வதே முக்கிய தொழிலாகும். அதைத் தள்ளிப் பார்த்தால், சில விடங்களில் ஆடுமாடு முதலிய பண்டங்களைப் பெருக்கிவிற்று ஜீவன நடக்கிறது. கைத் தொழில்களென்பவை விசேஷமாகக் காணுவதில்லை. வியாபாரமும் சில்லரையாகத்தான் நடப்பது.

இத்தொழில் வகைகளில் ஒவ்வொன்றையும் சற்று தீரவிசாரித்தால், அவற்றில் பல தோஷங்கள் காணப்படுகின்றன. அவைகளைப் பரிகரிக்க வேண்டிய நமது நாட்டில் சர்க்கார் தரப்பில் பல வருஷங்களாகப் பிரயத்தனம் நடந்துவருகிறது. என்றாலும், மகாஜனங்களுக்குள் கல்வியில்லாததாலும், விவேகிகள் முன்னுக்கு வந்து காரியம் நடத்த முயலாததாலும் நாளது வரையில் அவர்கள் பரிகார மாகவில்லையென்றே சொல்ல வேண்டும்.

முதலாவது கிருஷியைப்பற்றி ஆலோசிப்போம். எந்தக் கிராமத்தைப் பார்த்தாலும் பூமியை வேண்டியபடி, வழிமுட்டு போட்டு சாகுபடி செய்பவர் பத்திலொருபங்கு காணுவது அபூர்வம். தெரியாத் தனத்தினால் இப்படி இருப்பவர் வெகு சொற்ப பேரேயாம். பெரும் பாலர்க்கு இல்லாக் கொடுமையே காரணமாம். காலாகாலத்தில் உழுது, நல்ல விதையை விதைத்து, நீர்கட்டி வந்தால் விளைச்சலுக்கு குறைவேது? வானம் பார்த்த பூமிகளைப்பற்றி நாம் பேச வேண்டியதில்லை. நஞ்சைகள், தோட்டங்கள் இவைகளை மட்டுமே கவனிப்போம். இவைகள் நமக்கு கொடுக்கக்கூடிய பலனைப் பூராவாக நாம் அனுபவிக்கிறோமா? இல்லையென்றால் அது தோஷந்தானே. அதைப் பரிகரிக்க உபாயந் தேடவேண்டுவது அவசியமாயிற்றே. ஏன் இது வரையில் பரிகாரம் ஏற்படவில்லை? ஒன்று மட்டும

ல்ல, கிருஷிகர் பூமியைப் பிடித்துச் சாகுபடி செய்வதனால், விளைச்சல் கைக்கெட்டும்வரை அவைகளுக்குச் சாப்பாட்டிற்கு வகை வேண்டும். பூமிக்கு அவர்கள் சொந்தக்காரரானால், அவற்றிற்கு வாயிதாப் பணம் வேண்டும். குஞ்சு குழந்தைகளுக்கு ஏதாகிலும் சுபசோபனங்களும் நடக்க வேண்டும்.

இப்படி பலவகையிலும் செலவு மட்டும் நியதியாக ஏற்பட்டிருக்க, அதற்கு வரும்படி மட்டும் நியதியாக நம்மில் அனேகமாய் 100-ல் 95-பெயருக்கு ஏற்படுகிறதே யில்லை. என்றாலும் செலவாகியே தீரவேண்டி வருவதில், கிருஷிகருள் பெரும் பாலார் கடனில் முழுகியோ, அரைக்கஞ்சி குடித்தே வருகிறார்கள். இந்த ரகசியம் நமது சர்க்காருக்கு வெகுகாலமாய்த் தெரியும். ஆகவே இதற்குப் பரிகாரம் அவர்கள் தேடி வெகுகாலமாகப் பல உபாயங்கள் நடந்து வருகின்றன. இரண்டொன்று உங்களுக்கு நன்றாய்த் தெரியும் விவசாயம் விர்த்தியாக வேண்டிச் சர்க்கார் தரப்பில் தாலூக்காவிலிருந்து கடன் கொடுப்பது பழைய சங்கதி. ஆனால் அதைப்பற்றி அதிகமாய்ச் சொல்லிக் கொள்வதற்கில்லை. ஜனங்கள் அதிகமாக அந்த வகையிலும் பிரயத்தனம் செய்வது மில்லை. செய்தவர்கள் நல்ல பலனடைந்ததாகவு மில்லை. சர்க்கார் தரப்பை யொழித்துப் பார்த்தால் நம்மவர்களுடைய லாவாதேவி யிருக்கிறது. ஆனால் அந்த வகையிலும் ஏழை குடியானவர் முன்னுக்கு வருவதற்கில்லை. ஏனெனில் பணமானது வெகுகாலமாகப் "பள்ளமுள்ள இடத்தில் தண்ணீர் சேரும்," என்னும் நியாயத்தை அனுசரித்துப் பெருகி வருகிறது.

ஆகவே நம்மவருடைய லாவாதேவியினால் பசையுள்ளவருக்கு ஏதாகிலும் நன்மை கிடைப்பதே யொழிய வேறு பெயருக்கில்லை. ஓரேர்ப் பண்ணையம் வைக்க ஒருவன் வேண்டினாலும், விதை வகைக்கு ஏதாகிலும் ரூ. 50-க்குள் வேண்டிவந்தாலும், இவ்வகைக் குடியானவனுக்கு பணம் விசேஷமாக கிட்டுவதில்லை. கிட்டினாலும் 100-க்கு 18 அல்லது, 33 வட்டி கொடுக்கவேண்டி யிருக்கும் இதிலும் மோசமான பேர்வழியாகிய பறையர், சக்கிலியர் முதலியோருக்கோ கந்துக்கடையேதான் கதிமோக்ஷம். பள்ளப்பட்டி லப்பைகள் முதலிய கிராதகர்கள் இவர்களுக்கு ரூ. 5 அல்லது 10 கொடுத்து அவர்களுடைய உயிரைப்பிழிந்து வருகிறார்கள். தவிர சொத்தின் பேரில் பணம் கொடுப்பவர்கள், அது நல்ல முதலாகவிருந்தால், அதன்பேரில் ஒரு திருஷ்டிவைத்துக் கொண்டேதான் பணம் கொடுப்பது.

நம்மவருடைய லேவாதேவியை யொழித்துப் பேசுமிடத்து, நாட்டுக் கோட்டையார், ஜாயிண்டு ஸ்டாக்கு நிதிகளென்று இருவகை யோருண்டு அவர்களுள் நாட்டுக்கோட்டை செட்டியாரிடத்தில் "மாடு அடித்துச் செருப்புத்தானம செய்வதாகிய" பெருந்தோஷம் வெகுநாளாகக் காணுவதாம. பாங்குகளோ, ரூல்படி கண்டிப்பாய் நடந்து வருவதால் நம்மவர்களாகிய ஏழைகள் இம்மூலமாய் முன்னுக்கு வருவது வெகு அபூர்வ மென்று நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இப்படி யெல்லாமிருப்பதில் குடித்தனக்காரருக்குப் பிழைக்கும் வழி மெத்தவும் சுருங்கி வாதைப் படுவது பிரத்தியக்ஷம். இதைப்பரிகரிக்க வேண்டி சர்க்கார் வெகுதூரம் முயன்று வருவதாக மேலே குறிப்பிட்டோமன்றோ? ஆனால் இதுவரையில் அது சரியான பலன் கொடுக்க வில்லை யென்றும் நமக்கு விளங்கியிருப்பதில், ஏனிப்படியாயிற்ற தென்பதை நாம் இப்பொழுதறிய வேண்டிய ரகசியம். இதையறிந்தால், துக்கபரிகார மின்ன தென்றும் நமக்கு விளங்கும்.

இந்த ரகசிய மென்னவென்றால், மேற்குறித்த பரிகாரங்களி லெல்லாம் கக்ஷி யிரண்டுபட்டதே அவை பலியாமற் போனதற்குக் காரணமாம். பணம் கொடுப்பவ னொருவன், வாங்குகிறவ னொருவனானால் கொடுப்பவனுக்கு வேகிறவீட்டில் பிடுங்கினது லாபமாக வட்டியென்றும், தரகென்றும், மகிமை யென்றும், தீபாவளி யென்றும், தெண்ட மென்றும், துரோக மென்றும், எவ்வகையாலும் வரண்ட மரத்திலும், நார் உரித்துக் கொள்ளை கொள்ள பார்ப்பது சகஜம். வாங்குபவரிலும் பலர் வாங்கியதைக் கொடாமல் ஏமாற்றப் பார்ப்பது மனித சுபாவம். இப்படிக் கக்ஷி யிரண்டாவதில் பலன் நல்லதாவதில்லை. சர்க்கார் பணம் வாங்கப்போனாலும் இவ்வகைத் தோஷங்கள் இருவகையிலும் காணுவதால், கிரகஸ்தராகிய மகாஜனங்கள் அதை யபேக்ஷிப்பதில்லை.

சரி, இதெல்லாம் இப்படித்தானென்று வைத்துக் கொள்வோம். பரிகாரமென்ன? கக்ஷி யிரண்டுபடாம லெப்படிக் காரியமாகும்? என்று நீங்கள் கேட்கலாம்.

இந்தக் கக்ஷி விவகாரங்களை யொழிக்கவேண்டினால், அதற்குக் கோ-ஆபரேஷன் என்னும் ஒரு முறை யொழிய வேறுவழி யில்லை. ஆகவே கோ-ஆபரேஷன் என்பது இன்னதென்று நாமறிந்து அனுஷ்டிப்பது இப்பொழுது அவசரமாக வேண்டிய காரியம்.

மேலே நாம் கிருஷிகருடைய குறைகளை கொஞ்சம் விவரித்ததில், அக்குறைகளுக் கெல்லாம் மூலகாரணமாகப் பண மில்லாத குறைவையே பெரிதாக்கினோம். வாஸ்தவத்தில் அதுதான் மகத்தான குறைவு. ஆதலால் அவ்விஷயத்தில் கோ-ஆபரேஷன் என்பது சகாயம் செய்வதாக நமக்குத் தெரிந்தால், மற்றவிஷயங்களிலும் கோ-ஆபரேஷன் மூலமாக நாம் நன்மை யடையலா மென்பது நிச்சயம். ஆகவே, இம்முறையில் எங்கேயாவது லேவாதேவி நடந்து வந்தால், அங்குள்ள கிரகஸ்தரை விசாரித்துத் தெரிவது நலம். ஆயிரமுறை உபதேசிப்பதைவிட ஒரு முறை நடத்திக் காட்டுவது திறமல்லவா?

தெய்வாதீனம், திருப்பூருக்கருகில் இரண்டோரிடங்களில் இம்மாதிரி லாவாதேவி வற்கனவே நடந்து வருகிறது. அதை நடத்தும் தருமகர்த்தாக்களில் யாராகிலும் இந்தச் சபையிலிருந்தால், அவர்கள் முன்னுக்கு வந்து தங்கள் அனுபவத்தைச் சொல்ல வேண்டும். மண்ணரை, வேலாம்பாளயம், சோமனூர், சூலூர், இவைகளில் இம்மாதிரி லாவாதேவி யிரண்டொரு வருஷமாக நடந்து வருகிறது. பெருந்துறை பிர்க்காவில் விசாரித்தால் சுமார் 30-கிராமங்களுக் கதிகமாகவே இம்மாதிரி வியாபாரம் நடத்தி வருகின்றன. இவைகள் நடந்து வருவதில் யாருக்கென்ன விசேஷ நன்மையென்று நீங்கள் கேட்கலாம். அது கீழே தெளிவாகும். இவைகள் ஒவ்வொன்றிற்கும் ரூ-இ-ஸொ என்ற சங்கேதப் பெயரும் நம்பரும் கொடுத்திருக்கிறது. கிராமப் பாங்குக ளென்பது சாமான்யப் பெயர்.

நாளை வரையில் இந்தப் பாங்குகள் எல்லாம் அனேகமாய்ச் செழித்தே வந்திருக்கின்றன. சிலவிடங்களில் நன்றாய் வேரூன்றி வந்திருக்கின்றன. ஜனங்களுக்குள் கல்வியும் விவேகமும் அதிகரிக்கு மளவிற்கு எந்தக்கிராமத்திலும் இம்மாதிரிப் பாங்கு முதல்தரமாக நடந்து வாரா மென்பதில் ஆக்ஷேபமில்லை. குறைவுகள் கண்டால், அது ஜனங்களுடைய மூடத்தனத்தினாலும், மூரட்டுத்தனத்தினாலும் உண்டாவதுதான்.

ஒவ்வொரு பாங்கும் ஒரு கிராமத்திற்கென்றோ, அல்லது அடுத்துள்ள பல மஜராக்களுக்,

கென்றே ஏற்பட்டிருக்கிறது. சுமார் 40 மெம்பர்கள் முதல் 300 மெம்பர்கள் வரை காணலாகும். இந்த மெம்பர்களெல்லோரும் சேர்ந்து சில விசேஷ விதிகளுக்கு கட்டுபட்டு இந்தியா ஆக்ட் 12-ம் வருஷத்திய 2-வதின்படி ரிஜிஸ்தர் செய்து கொண்டு, பங்குப்பணம் முதலிய உள்ளூர் பணத்தையும், வெளியில் கோயமுத்தூர் நகரபாங்கு போன்ற இடங்களிலிருந்து கடனாக வாங்கும் பணத்தையும் சேர்த்துத் தங்களுக்குள் ஆவசியம் போலக் கடன் கொடுத்து வாங்கி வருகிறார்கள். பாங்கியின் லாப நஷ்டங்கள் மெம்பர்களனைவரையும் பொறுத்தது. வெளியிலிருந்து வாங்கும்பணத்திற்கு மெம்பர்களுடைய சர்வ சொத்தும் ஜாமீனாக விருப்பதால் கடனும் சுலபமா யகப்படுகிறது. வாங்குபவரும் ஜாக்கிறதையாகவே வாங்குகிறார்கள். இதைச் சமயம்போல வாங்கி வேண்டியவர்களுக்கு கொடுக்கப் பஞ்சாயத்தார் ஏற்பட்டிருக்கிறார்கள். வாங்கும் போதும் பட்வாடா செய்யும் போதும் வட்டி 7½ அல்லது குறைந்த வீதமென்றும், சராசரி 9-அல்லது குறைந்த வீதமென்றும் முறையே நிபந்தனைகளை வெகு கண்டிப்பாய் ஏற்பட்டிருக்கின்றன. பஞ்சாயத்தார் மனம் போனபடி நடந்தால் அதனால் வரும் லாப நஷ்டங்களுக்கு அவர்களும் சர்வ சொத்துடன் பாத்தியப்பட வேண்டி வருவதால் உஷாராகவே நடக்க வேண்டி யிருக்கிறது. இவ்வளவு நிர்ப்பந்தத்திலும் தப்புவழியில் போகிறவர்களை தட்டி யெழுப்பிச் சவுக்கடி வேண்டுமானால் கொடுப்பதற்குக் கனம் ரிஜிஸ்ட்ராரவர்களும் அவர்களுடைய சிப்பந்தியும் இடைவிடாமல் உழைத்து வருகிறார்கள்.

இப்படி நடப்பதினால் இந்த லாவாதேவியில் மேல் நாம் குறிப்பிட்ட பெரிய தோஷத்திற்கு இடமில்லை என்பது இப்பொழுது விளங்கும். ஆதலால், கக்ஷி யிரண்டு படுவதற்கு இம்மாதிரி பாங்குகளில் சிறிதும் இடமில்லை. பஞ்சாயத்தார் அக்கிரமமாக வட்டி வகையரா ஏற்படுத்தவோ, வசூலிக்கவோ கூடாதென்று நிர்ப்பந்தமிருப்பதால் சாமான்யமாய் அவர்கள் அதை மறைத்து நடப்பதற்கில்லை. அவர்கள் அதிக வட்டி வாங்கி யாருக்கும் உபயோகமாவதில்லை. ஏனென்றால், வருஷ முடிவில், கணக்குகளைப் பரிசோதித்து லாபம் இவ்வளவென்று கண்டபின், அந்தலாபத் தொகை பாங்கியின் க்ஷேமநிதி யாகிறதேயல்லது, பாங்கியைச் சேர்ந்தயாருக்கும் லாபமாகப் பகிர்ந்து கொடுக்கத் தக்கதன்று.

திருப்பூர் பக்கத்தில அதிகமாய்ப் பாங்குகள் பிரபலிக்காததலால், இங்கு வந்திருக்கும் குடியானவராகிய மகாஜனங்களுள் சிலருக்கு விஷயம் தெரிந்திருந்த போதிலும், பெரும்பாலருக்குத் தெரிந்திராதென்றெண்ணியும், பாங்குகள் மட்டுமே நாளது வரை கோ-ஆபரேஷன் முறையில் நடந்து வருவதால், அவைகளைச் சற்று விவரித்தும் பேச நேரிட்டது. இது அனாவசியமென்று யாருக்காகிலும் பட்டால், அவர்கள் இந்த நியாயத்தைக் கவனித்து மன்னிப்பாராக.

இப்படிப்பட்ட பாங்குகள் ஒவ்வொரு கிராமத்திலு மேற்பட்டு, அதிலுள்ள குடியானவர், கூலிக்காரர், சக்கிலியர், பறையர் முதலிய சமஸ்தமான ஜனங்களும் இதில் மெம்பராகி, வெளியிலிருந்து முதன் முதல் கொஞ்சகாலம் பணம்வாங்கவேண்டி யிருந்தாலும் காலக்கிரமத்தில் உள்ளூர்ப்பணமே அதிகரித்து ஏழைகளுக்கு வேண்டியபோதெல்லாம் சுலப வட்டியில்பணம் கிட்ட வேண்டுமென்பதும், அதனால் அவ்வேழைகள் தத்தம் தொழில்களில் அப்பணத்தை யுபயோகித்து முன்னுக்குவந்து, தாங்களும் சிறிது சிறிதாகச் சேர்த்துவைத்து, தரித்திரம் நீங்க வகைபார்க்க வேண்டுமென்பதுமே சர்க்காருடைய நோக்கமாம். அதற்கென்றே மேற்கூறிய ஆக்ட்டில், இம்மாதிரிப் பாங்குகளில்

மெம்பர்களாயிருப்பவருக்கு ஸ்டாம்பு வகைரா செலவு வேண்டாமென்றும், ரிஜிஸ்டர் வகைரா செலவு தேவையில்லை யென்றும் விதித்திருக்கிறார்கள். பாங்குகளைக் கணக்கு வழக்கு வகையில் பரிசோதிக்க உத்தியோகஸ்தரை நியமித்திருக்கிறார்கள். இன்னும் எவ்வகையானும் சகாயம் செய்யத் தயாராயிருக்கிறார்கள்.

இவ்வாறு நமது நாடெங்கும் கோ ஆபரேடிவ் பாங்குகள் பரவினால், மேற்குறித்த தோஷங்கள் எல்லாம் ஒவ்வொன்றாய்க் குறைவது நிச்சயம்; ஏனெனில், இந்த பாங்குகளில் கூலி யிரண்டில்லை யென்பது பிரத்தியக்ஷம். ஆதலால் பகற்கொள்ளை யடிப்பவருமில்லை, அதற்குச் சௌகரியமுமில்லை. நல்ல முதல் வைத்திருப்பவன் யோக்கியனாயிருந்தால் அந்த முதல் அவனுக்கும், அவன் பரம்பரைக்கும் சாசுவதமாக உதவலாம். பறையர் சக்கிலியர் முதலிய அப்பாவிகள் பள்ளப்பட்டி லப்பைகளுக்காக பாடுபட்டு பிராணனை விடவேண்டியதில்லை. நாட்டுக்கோட்டை பிரபுக்கள் மாடடிக்க வேண்டியதுமில்லை, செருப்பு தானஞ் செய்ய வேண்டியதுமில்லை. பள்ளமுள்ள விடத்திலேயே தண்ணீர் போய்த் தங்கவேண்டியதுமில்லை. பாங்கின் முதலாளிகளும், பாங்கில் வியாபாரஞ் செய்பவரும் ஒரே கட்சியாராதலால் ஊர் இரண்டுபடுவதற்கு நியாயமேயில்லை.

ஆதலால் கிருஷிகராகிய கனவான்கள் இதையெல்லாம் யோசித்து, அவரவர்களில் சிக்கிரம் இம்மாதிரிப் பாங்குகள் ஏற்படவேண்டி முயல வேண்டும். யாருக்கும் இதனால் நஷ்டமே கிடையாது இப்பொழுது 10, 12 விதம் வட்டி வாங்குபவருக்குக் கோர்ட்டுக்குப் போவது, வட்டி தள்ளுவது முதலிய உபத்திரவங்கள் இருப்பது நன்றாய்த் தெரியும். இந்த உபத்திரவமொன்றுமில்லாமல் தங்கள் பணத்திற்கு 7 வரையில் வட்டிப்பணம் 6 மாதத்திற்கொருமுறையே வீடு தேடி வந்தால், நாம் குதி போட்டுக்கொண்டு வாழலாமல்லவா? இப்பாங்குகள் பலப்படுமளவிற்கு இந்த சௌகரியம் நிச்சயமா யேற்படும். ஆதலால் பணக்காரர், ஏழைகள் ஆகிய இருதிறத்தாரும் இக்காரியத்தில் தாராளமாய்ப் பிரவேசித்து நடத்திவரலாம். இனி யொருமுறை திருப்பூர்க் கால்நடைச் சந்தை கூடுமுன் இங்கு ஒரு பாங்கு ஏற்படவேண்டுமென்றும், திருப்பூரிலுள்ள ஏழைகளுடைய கஷ்டம் ஒருவாறு விடியவேண்டுமென்றும் நாம் பிரார்த்திக்க வேண்டியவர்கள்.

இதுவரை பாங்குகளை வருணித்துவந்ததில், கோ ஆபரேஷன் என்னும் முறையைப் பிரபலப்படுத்துவதா லுண்டாகும் நன்மைகள் ஒருவாறு விளங்கலாம். அதாவது கிராமங்களிலுள்ள யோக்கியரும் கிரகஸ்தருமான குடி ஜனங்களுக்கு இப்பொழுதிருக்கும் இடையூறுகளில் பல நீங்கிப்போகுமென்றும், அதனால் பாடுபட அக்கறையுள்ள யாவரும் முன்னுக்கு வரச் சௌகரியமுண்டாகுமென்றும் நாம் அறிய வேண்டியதாம். இம்மட்டேயன்றி இதன் மூலமாய் இந்திர ஜாலம் ஒன்றும் சித்திக்காதென்பதை நாம் வலுவாய்ப் பிடித்து மனத்திற் கொள்ளவேண்டும். இதையொரு மந்திரமாகவைத்து உருச்செபத்தால், நமக்கு உட்கார்ந்தவிடத்தில் புதையலகப்படுமென்றெண்ணுவது பிசகிலும் பிசகு. கோ ஆபரேஷனைக் கைப்பற்றிப் பணத்தை வேண்டியமட்டில் வாரிக்கொட்டிக் கொள்ளலாமென்றும் நினைத்து இதில் யாரும் முன்னுக்கு வரக்கூடாது. "நாம் பெரிய தனக்காரர், நமது பேச்சுக்குப் பதில் யாரும் சொல்லக்கூடாது. நம்முடன் தாழ்ந்த ஜாதியானொருவனும் சேரக்கூடாது," என்றிந்தப்படி அகங்காரமுற்றிய பெரிய மனிதருக்கு இதில் காரியமேயில்லை! ஏனெனில் கோ-ஆபரேஷன் என்பது ஏழை

யைக் கைகொடுத்து முன்னுக்குக் கொண்டு வரும் உற்றதுணையாகும். அதில் சேர்ந்து உழைப்பவர்களைவரும் ஒரே பதவி வகித்து பரஸ்பரம் சகாயம் செய்து முன்னுக்கு வர வேண்டியவர்கள்.

இவ்வாறு கோ ஆபரேடிவ் பாங்குகள் எங்கும் மலிவது நல்லதென்று உங்களுக்குத் தோன்றினால், நமது கிராமங்களுக்கும், கிராமத்தவராகிய மகா ஜனங்களுக்கும் இனி வெகு நல்ல தசை உண்டாவது நிச்சயம். பாங்குகள் மட்டும் மலிந்து, ஜனங்களுக்குக் கோ ஆபரேஷனுடைய அருமை தெரியட்டும். பிறகு இன்னின்ன வகைகளில் கோ ஆபரேஷன் பிரபலிக்கு மென்பதை நாம் வருணிக்க முடியாது. ஆனால் அவற்றுள் சிலவற்றைமட்டும் நாம் இங்கு குறிப்பிடுவோம்.

முதலாவது, ஆடு, மாடு, குதிரை, கோழி முதலிய பண்டங்கள் இப்பொழுது சந்தைக்கு வந்திருப்பனவைகளில் முதல் தரமா யிருப்பவை பட்டக்காரர் முதலிய சில பெரிய மனிதர்களுடைய உடைமை மட்டுமேயாம். மாடு, எருது, எருமை, குதிரை, முதலியவைகளுக்கு இப்பொழுது என்ன கிராக்கி யேற்பட்டு வருகிற தென்பது நீங்கள் நன்று யறிந்தவிஷயம். ஆதலால் சௌகரியமுள்ள விடங்களில். இன்னும் எத்தனையோ ஆயிரம் ஏழைக்குடிகள் பண்டங்களைப் பெருக்கித் தாங்களும் சுகித்து அவற்றை வாங்குவோருக்கும் சுகமுண்டாக்கலாம். ஆனால் ஏழைக்குடிகளில் ஒவ்வொருவனும் தானாகச் செய்வதென்றால், அநேகமாய் யாவருக்கும் இது சாத்தியமாகாது. இதை விட்டுக் காங்கய நாட்டில் வசதியான இடங்களில் கிராமவாசிகள் பலர் சேர்ந்து ஒரு சொஸைட்டியாகவோ சங்கமாகவோ ரிஜிஸ்தர் செய்துகொண்டு, தாங்களும், கூடிய பணம் சேகரித்து, நகர் பாங்கு போன்ற இடங்களிலிருந்து வேண்டியமட்டில் கடனாகக் கொண்டு ஆடு, மாடு, எருமை, குதிரை போன்ற பண்டங்களில் தக்கவற்றைத் தக்க சகாயத்துடன் வாங்கிப் பெருக்கிவிற்றால் திருப்பூர் சந்தைக்கு இன்னும் எத்தனை ஆயிரம் பண்டங்கள் வரக்கூடாது? கோகுலமாக விளங்கு மென்பதில் சந்தேகமேயில்லை! இப்படிபாவதில் கூடும் லாபத்தை மெம்பர்களல்லாமல் வேறு யாவரும் அடைவதில்லை.

இப்படிப் பண்டம் பெருகச் சாதனமேற்பட்டால், அதை யனுசரித்து வேறுவகைகளிலும் தொழில் பிரபலிக்கலாம். மாடுகளிருக்கு மிடத்தில், பால், தயிர் முதலிய சமான்கள் பெருபடியாகச் சேருவதால், அவற்றைச் சேர்த்துத் தக்கவிடங்களில விற்று லாபமடைய ஹேது வுண்டாகும். சரக்குகளை மொத்தமாய் விற்பதற்குச் சங்கங்கள் ஏற்பட்டால், வேறிடங்களிலிருந்து சரக்குகளை மொத்தமாய் வாங்குவதற்கும் அவைகள் உதவும்.

வாங்கவேண்டிய சரக்குகளென்ன? எத்தனையோ ஆயிரமுண்டு. கொஞ்சம் யோசிப்பவருக்கு இது எளிதில் விளங்கும். இதுவரை நமது கிராமங்களில் விவசாயம் நடந்துவருவது ஒரு தினுசு: அதாவது, அவனவன் காரியத்தை யவனவன் பார்த்துப் போவதேயாம். இனியப்படி நடவாதென்பது உங்களில் சிலருக்காவது தெரியவாலாம். ஏனெனில் நமது உணவுப் பொருள்களாகிய நெல், சோளம், கேழ்வரகு முதலியதான்னியங்களுக்கும், பருத்தி, கரும்பு முதலியவற்றிற்கும் தூரதேசத்திலிருந்து கிராக்கி

கூடிவருவதால், அந்த கிராக்கியை யனுசரித்தும், கிருஷி டிபார்ட்மெண்டார் நமது நன்மைக்காக அனுபவபூர்வமாய்ச் சொல்லும் உபாயங்களைக் கைப்பற்றியும், இனி விவசாயம் நடக்க வேண்டியிருப்பது நிச்சயம். அப்படி நடப்பதினால், இருப்புக் கலப்பை, இருப்பாலை, எண்ணெய் யந்திரம், எரு, முதலிய கிருஷிச் சாதனங்களை அவரவர் தாமாகத் தருவிப்பது நல்லதா, பலர் ஒன்றுகூடித் தருவிப்பது நல்லதா, விவேகிகள் சொல்லட்டும். தவிர இப்படித் தருவித்து, விளைச்சலைப் பலப்படுத்தினால், அதைக் காலமறிந்து விலை கூடும்போது விற்பது நல்லதா விளைய விளைய ஆக்கப் பொறுத்தும் ஆறப்பொறாமல், அடுத்த சந்தையிலோ, அல்லது வேறுவகையிலோ அட்டாதுட்டியாகப் போன விலைக்கு விற்பது நல்லதா, சொல்லுங்கள். நல்லதின்னதென்று எந்தக் குழந்தையும் சொல்லும். ஆனால் நல்லதென்று தெரிந்தால்மட்டும் பிரயோஜனமில்லை. அது ஏட்டுச் சர்க்கரையாயிற்று. தெரிந்ததை யனுஷ்டிக்கவேண்டும. கோ-ஆபரேடிவ் முறையில் சங்கங்களேற்பட்டால், ஒன்றைப்பற்றி யொன்றாகப் பலவகைகளில் கிராமத்தவருக்கு லாபம் பெருகும். ஆனால் அதை விவரிப்பதற்கு இங்கு அவகாசமில்லை.

இம்மட்டேயல்ல. கோ-ஆபரேடிவ் பாங்குகளோ, வேறு சங்கங்களோ கிராமங்களில் வேரூன்றிச் செழித்தால், அதை நிர்வகிக்கும் பஞ்சாயத்தவருக்கும் தரும குணம் பரோபகாரம் முதலிய லக்ஷணங்கள் மலிந்து, அதனால் ஊரில் இப்பொழுது காணும் பல அவலக்ஷணங்கள் குறையுமென்பது நிச்சயம். ஊரைச் சுற்றிப் படைக்கள்ளி வளர்ந்திருப்பதும், வாசனை வீசுவதும், இட்டேரிகளில் வண்டிகள் குடைசாய்வதும், மாதங் காதவழி போவதும், மாறி சுப லக்ஷணங்கள் பெருகும். குடிகிணறு, பால் தயிர் முதலியவையும் மலியும். கிராமங்களில் பள்ளிக்கூடங்கள் அதிகரித்து துர்க்குறிகள் மட்டுப்பட்டு சிவில், கிரிமினால் தாவுகளில் வியாச்சியங்களும் குறைந்து, அதனால் நமது வக்கீல் இஷ்டமித்திரருக்குக் கொஞ்சம் துர்த்தசை மேலிட்டாலும் மேலிடும்.

இப்படி பல வகையாலும் கிராம மகா ஜனங்களுக்கு க்ஷேமத்தைப் பெருக்குவதற்கு கோ ஆபரேஷன் என்பது ஏற்ற சாதனமாயிருப்பதால், அந்த முறையில் தற்காலம் சாத்தியமாயிருக்கிற பாங்குகளென்னும் சாதனங்களை மலியச் செய்ய நீங்கள் தாமதமின்றி பிரயத்தனப்படவேண்டும். ஏனெனில் அதுதான் எல்லாவற்றிலும் சுலப சாத்தியமானது. தவிர மற்றெல்லாக்காரியங்களுக்கும் அது அஸ்திவாரமாவது. ஆகலால் அதை முதலில் ஆரம்பிக்கவேண்டும். அதை ஆரம்பித்து நடத்தினால், விஷயந்தெரிந்தவர் அடிக்கடி உங்களூர்களுக்கு வருவதற்குச் சர்தர்ப்பமுண்டாகும். உங்களுக்கும் அனுபவ முதிர முதிர யுக்தி யதிகரிக்கும். அதை யனுசரித்துப் புதிது புதிதாகக் காரியமாரம்பிக்க உற்சாகமுண்டாகும். மொத்தத்தில் க்ஷேமம் பெருகும். உங்களூர்களிலுள்ள ஏழைகள் தாங்கள் பாடுபட்டுச் சம்பாதிப்பதைத் தங்கள் குழந்தைகளுக்கிட்டு, குடி முதலிய அவலக்ஷணங்கள் குறைந்து, கொலை முதலிய குற்றங்கள் நீங்கி, படிப்பு முதலிய சற்காரியங்கள் பெருகி, காலரா முதலிய வியாதிகளுக்கிடமின்றி எல்லோருக்கும் கிரகஸ்த மார்க்கமாய்ப் பிழைக்க வழியுண்டானால், அது

யாருக்கு விரோதம் செய்யும்? அதனால் யாருக்கு நஷ்டமுண்டாகும்? நாடெங்கும் வாழக்கேடொன்று மில்லையல்லவா?

இப்படிக் காலக்கிரமத்தில் சுகித்து வாழ்ந்து இகபரங்களிரண்டையு மடைவது நல்லதென்று உங்களுக்குக் கண்டால், சும்மாயிராமல் இதோ வந்திருக்கும் கனம் அஸிஸ்டெண்டு ரிஜிஸ்திரார் முதலிய பெரியோர்களைச் சுற்றிக்கொண்டு மன்றாடி பாங்குகளுக்கு உழைப்பதென்று தீர்மானஞ் செய்துகொள்ளுங்கள், இந்த ஆக்கிரகம் யாராவது சிலருக்காவதுண்டாகுமானால் நான் இங்குநின்று இந்நேரம் உங்களை வாதித்ததற்கு வேண்டி விசாரப்படமாட்டேன். இதுவரையில் பொறுமையாயிருந்து கேட்டதற்காகச் சகலருக்கும் என் வந்தனம்கூறி நிறுத்துகிறேன்.